


# தூரத்து விடியல்

(கவிதைத் தொகுப்பு)

விக்னா பாக்கியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரத்து விடியல்

(கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் :

**விக்னா பாக்கியநாதன்**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4342926

தொலைநகல் : 0091-44-4346082

மின் அஞ்சல் : e-mail : Manimekalai@eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ தூரத்து விடியல் |
| ஆசிரியர் | ➢ விக்னா பாக்கியநாதன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 96 |
| நூலின் விலை | ➢ ரூ. 20.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. சாய் |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ ஸ்கிரிப்ட் ஆப்செட், சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | வானலைகளில் தமிழ் | 7 |
| 2. | டொச்சா? தமிழா? | 9 |
| 3. | கன்னல் மொழி | 11 |
| 4. | தீர்க்க தரிசனம் | 13 |
| 5. | சட்டவிதி | 15 |
| 6. | சமாதான வெண்புறாக்களே! | 17 |
| 7. | பூவரசு நிழலினிலே... | 19 |
| 8. | காலமாற்றம் | 21 |
| 9. | பனிப்பருவம் | 23 |
| 10. | கட்டவிழ்ப்பு | 25 |
| 11. | காலச்சக்கரம் | 27 |
| 12. | தொலைந்தது மனிதம் | 29 |
| 13. | உள்ளக் காய்ச்சல் | 31 |
| 14. | தூரத்து விடியல் | 33 |
| 15. | பகைதன்னைச் சாடு | 35 |
| 16. | இதயமலர் | 37 |
| 17. | கட்டுக்கோப்பு | 39 |
| 18. | பட்டாம் பூச்சி | 40 |
| 19. | வேலையற்றவள் | 42 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 20. | சூரியக்கதிர் | 44 |
| 21. | மௌனம் | 45 |
| 22. | அடிமைகளா? | 47 |
| 23. | மனைவி | 48 |
| 24. | பொம்மலாட்டம் | 50 |
| 25. | உருப்படுமா? | 52 |
| 26. | யார் எழுதிய வேதம்? | 54 |
| 27. | நப்பாசை | 55 |
| 28. | அழியாச் சீதனம் | 57 |
| 29. | கலாச்சாரக் கட்டடம் | 58 |
| 30. | அந்தஸ்து | 59 |
| 31. | முறையான போதனை | 60 |
| 32. | ஒன்றே குலம் | 62 |
| 33. | விதியோ? | 63 |
| 34. | பொல்லாத வயிறு | 64 |
| 35. | சிந்தனைசெய் மனமே! | 65 |
| 36. | தாயகத்திலிருந்து ஒருகுரல்! | 68 |
| 37. | குறளின் நிழல்கள் | 76 |
| 38. | ஜோர் - ம(ணி)னிக் குறள்கள் | 89 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜேர்மனியில் வாழும் புலம்பெயர்ந்த தமிழரான திருமதி. விக்னா பாக்கியநாதன் மணிமேகலை வாசகர்களுக்குத் தொடர்ந்து பல இலக்கியங்களைப் படைத்து வருகிறார். அந்த வரிசையில் இப்போது "தூரத்து விடியல்" என்ற கவிதைத் தொகுப்பும் வாசகர்களுக்கு விருந்தளிக்க வந்துள்ளது.

இக்கவிதைத் தொகுப்பில் மூன்று பகுதிகள் உள்ளன. முதற்பகுதி மொழிப்பற்று, நாட்டுப்பற்று, தத்துவம், பெண்ணுரிமை என்று பல்சுவை நிறைந்ததாக அமைந்துள்ளது. இவை மரபு, புதுக் கவிதை, ஹைக்கூ எதிலுமே சேராமல் தனக்கென்று ஒரு பாணியில் அமைந்து படிக்கும்போது எழுச்சியைத் தூண்டி சிந்திக்கவைக்கும் அமைப்பில் உள்ளன என்பதை வாசகர்கள் படிக்கும்போது உணர்வார்கள்.

இரண்டாவது பகுதியில் ஆசிரியரின் "குறளின் நிழல்கள்" அமைந்துள்ளது. பெயருக்கேற்ப திருக்குறளின் சாயலில் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் திருக்குறளில் சொல்லப்படாத புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் மேன்மை மற்றும் வழிமுறைகள் பற்றி சொல்லப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"திருடியவன் திருந்திடத் திடங்கொண்டா னாகில்*
*திருமகள் உறைவாள் அவனிடம்"*

*"தாய்க்குப் பின்தான் தாரமானாலும் - தாரமும்*
*சிலநேரத்தில் தாயாகலாம் தன் சேவையால்"*

*"கற்பு என்பது கர்ப்பப்பை உள்ள இடத்திலா - அது*
*மற்றவர்க்கில்லையா பகர்"*

என்பது போன்ற வித்தியாசமான கருத்துக்கள் இந்த இரண்டாம் பகுதியில் நிறைய உள்ளன.

மூன்றாம் பகுதி "ஜேர் - ம(ணி)னிக் குறள்கள்" என்பதாம். உண்மையில் இவை மணிக்குறள்கள்தாம்.

*"தோன்றில் ஜெர்மனியில் நாயாய்த் தோன்றுக*
*அஃதின்றேல் தோன்றாமை நன்று."*

*"சொந்தப் பிள்ளையைத் திருத்த கண்டித்தால்*
*வந்துவிடும் போலீஸ் வக்காலத்துக்கு"*


என்பன போன்ற குறள்கள் ஜெர்மனியைப் படம்பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. வாசகர்களுக்கு இக்கவிதைத் தொகுப்பு நல்ல விருந்து. சுவைத்து மகிழுங்கள்!

**- *பதிப்பகத்தார்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூரத்து விடியல்

## வானலைகளில் தமிழ்

அந்திய நாடதனில் வாழும் எம் சிறார்கள்
அன்னை மொழியை மறவாதிருக்க - இங்கு
அரும்பின தமிழ்க்கல்வி கலை கலாச்சாரங்கள்
எங்கள் கலாச்சாரங்களை மட்டும் அந்நியர் முன்னே
நாங்கள் யாரென எடுத்துக் காட்டிடும் பெருமையும்
ஏற்றமும் எங்கள் தமிழின் சொந்தக்காரராம் எமக்கே!

சிறுவர் வாயினிற் செந்தமிழ் உருக்குலைந்து வர
சேர்ந்துவிட்ட அந்நியமொழியுடன் போட்டி போட
சீக்கிரத்தில் வெற்றி உண்டு செந்தமிழுக்கு - அதன்
சொந்தமென தமிழர் நாமிருக்க எப்படித்தமிழ்
செத்துப் போகும் எம்சிறுவர் வாயைவிட்டு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை செய்து பெற்றோர் தம் சிறார்க்கு
சீரிய எதிர்காலம் காட்டிடவே, போற்றிடவே
எங்கள் தமிழ் அது சொந்தத் தமிழெனவும்
அது வாழ்வதும் எங்கள் தமிழீழம் எனவும்
ஊட்டுதல் முதற்கடமை, இங்கவர்க்கே!

எங்கள் தமிழே ஏற்றமிகு தமிழே! - எமை
நீங்கிடாச் சொந்தத் தமிழே! சுடர்தமிழே!
இங்கே தமிழரென நாம் பெருமையொடு வாழ
சங்கே முழங்கு! தமிழ்ச் சுதந்திரத்தின் சங்கே முழங்கு!

வள்ளுவர் கம்பரிளங்கோ ஔவையார்
வாஞ்சையுடன் தமிழை வளர்த்திடவும்
வன்மைமிகு மன்னர்கள் போற்றி வாழ்த்திடவும்
வளர்த்து விட்ட மொழி எங்கள் சொந்தத்தமிழ்!

செந்தமிழினிமை நாவினில் மணந்திட
சொந்த மொழியிருக்கவும் தமிழைக்கற்றுணர்ந்து - இதற்கு
சுந்தர இலக்கணம் எழுதினார் அந்நிய அறிஞர் பெஸ்கி
இந்தத் தன்மையில் எங்கள் தமிழ் என்றும்
சொந்தத் தமிழரை மட்டுமன்றி அந்நியரையும் ஈர்த்து
அவனியில் இன்று ஒலித்திடும் அழகுத்தமிழ் பாரீர்!

எட்டுத்திக்கும் தமிழொலி ஓங்கிடப் பாரதியின் கனவு - உலகில்
நாட்டுக்கு நாடு ஒலிப்பது தேன்தமிழே - இதன்
சொந்தக் காரராம் எமக்குப் பெருமையன்றோ!

செந்தமிழின்று ஐரோப்பிய வானலைகளிலே தவழ்ந்து
சிந்தையினிக்க வானொலி - தொலைக்காட்சியில் ஒலிப்பதை
பாரதி கண்டு எப்படிக் களிப்பானோ?
புதுயுகமே! காலமே பதில் சொல்வாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொச்சா? தமிழா?

## (சிறுமியின் கருத்து)

டொச்சா? தமிழா? எதுதேவை இங்கே
அடித்துச் சொல்வேன் இரண்டும் என்றே
அந்நிய நாடதில் வாழ்வதால் டொச்சை
அனைவரும் கற்பது கட்டாயமே.
அன்னை மொழி தமிழ் என்பதால்
அதனை மறவாமை அவசியமே!

பாடசாலையிலே டொச் மயம்
வீட்டுக்கு வந்தால் தமிழ் மயம் - இப்படி
இந்த நிலையிலே நாம் புலன் செலுத்தி
அடிக்கடி மூளையை மாற்றி
மொழி பெயர்ப்புகளை எம்முள்ளேயே செய்து
அன்றாடம் கருத்துக்கள் பரிமாறி
அறிவுடைப் பிள்ளையாக
வாழமுடியும் எம்நிலை.

தமிழா? டொச்சா? எதைக் கதைப்பது?
அறியாமைக் கேள்வி இது - நாம்
தமிழர் என்பதால் தமிழ் எம் மூச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எம் உடலிலே ஓடும் உதிரத்தில்
டொச்லாண்டில் வாழ்வதால் டொச்கல்வி!

டொச் பிள்ளைகளுடன் விளையாடுவதால்
தமிழ்ச் சிறார்கள் எம் வாயில் டொச்
டொச் சூழ்நிலைக்கு டொச்மொழியையும்
தமிழ்ச் சூழலுக்குத் தமிழையும் பேசும்
தத்துவம் எமக்குத் தேவை!

அடிக்க அடிக்க அம்மியும் நகரும்
படிக்கப் படிக்கத் தமிழும் புரியும்
எறும்பு ஊரக் கற்குழியும் - தமிழை
எழுத எழுத எழுத்தும் இலகுவாகும்.
டொச்சா? தமிழா? என்று கேட்காமல்
இரண்டுடன் ஆங்கிலமும் கற்போம்!

இயன்றவரை மனது வைத்து
இந்த மொழிகளில் பற்றுவைத்து
இந்நாட்டில் வாழ்தல் எம்கடனே!

எந்நிலை வந்தாலும் எம்மொழி பண்பாட்டைச்
சிந்தாமல் சிதறாமல் பேணி
செந்தமிழீழப் பிள்ளைகளாக வளர்ந்து
சொந்த நாட்டைப் பேணுவோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னல் மொழி!

சின்ன வயதுடைய சிங்காரப் புதல்வி - அவள்
சிரித்த முகமுடைய செல்வி
அன்னையின் குணத்தைப் பெற்றவள் - நல்
அழகு முகம் கொண்ட செல்வக்கிளி
கன்னல் மொழி பேசுகிறாள் "டொச்சில்" - ஐயோ!
அன்னை மொழி வாயில் இல்லையினி
என்ன கொடுமையிது! செந்தமிழ்ப் புதல்வி?
ஏனிந்த மாற்றம் உந்தன் வாயிலே.

கன்னல் மொழியான அன்னைமொழி எங்கே - என்
சின்னப் பாவையே உனக்கேன் இக்கதி?
கண்மூடி நீதூங்கிட உன் அன்னை - நிதம்
தாலாட்டுப் பாடினாளா டொச்சிலே?
உன்னைச் சொல்லிக் குற்றமில்லை மகளே - உனை
ஈன்றவர் செய்துவைத்த பாதகமே!
சின்னப் பாப்பா! தமிழ்க்குழந்தையே - இனி
சிங்காரத் தமிழில் மழலை பேசாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே! தமிழணங்கே உனைமறந்து - இங்கு
ஒதுக்கிடும் பிள்ளைதனைப் பாராய்!
தன்னையே உனக்குத்தந்த தமிழரும் - மீளத்
துயில் கொண்டனரோ இதைச் சகியாமல்
உன்னையே நினைத்து வாழ்வோர் தொகை - இங்கு
எத்தனை குழந்தைக ளென நானறியேன்
எண்ணியே பார்! தமிழன்னையே - உன்னை
அன்னையென மறுக்கும் தமிழ் மழலையை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்க தரிசனம்

போரறியேன் பதற்றம் தானறியேன்
பஞ்சம் அறியேன், பட்டினியும் தானறியேன்
உணவென்று பலவகையை உண்ணும்போது
உண்மையில் எம்மினத்துப் பஞ்சமறியேன்
தமிழறியேன், எம்தமிழெழுத்தும் அறியேன்
தனியே ரி.வியுடன் இருப்பதற்குத் தெரிந்து கொண்டேன்!

இல்லையென்று எதுவும் எனக்கில்லை
எல்லாம் பெறுவேன் நினைத்த போதிலே
தாய்நாட்டை நான் மறந்தேன் - நம்
தாயகத்தை நான் அறிவதற்கே - ஒரு
தருணமும் எனக்குக் கிடைத்ததில்லை.

தமிழ்ப் பண்பு நானறியேன் அதைப்
புகட்டிடவும் எனக்கு யாருமில்லை -என்
பெற்றோருக்கோ வெளிநாட்டு மோகம்
போதை போல அவர்க்கு சினிமாவில் தாகம் - ஆதலால்
பேதை எனக்கோ, தமிழ் மணம் தெரியாது
அதன் தேவை என்பதும் இப்போது புரியாது.

முன்னோர் நெறிகள் அறியேன் - நம்
மூத்தோர் சொல்லின் அருமை புரிந்திலேன்
அந்நிய நாடென்று இது அறிந்தேன் - இங்கு
அன்னை மொழி அந்நிய மொழி ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய மொழி பேசுகையில் எனக்கு
அன்னை தந்த கைதட்டலால் - எங்கள்
அன்னை மொழியையே மறந்தேன் - ஆதலால்
அன்னை மொழி அட்சரங்களோ
அழகான பூக்களாகத் தோன்றுவதே என் கண்ணுக்கு.

தமிழறியேன், தமிழ்ப் பண்பறியேன் - என்னைத்
தரமற்றவன் என எண்ணிட வேண்டா
அமுதொரு தமிழை ஊட்டிட - எனக்கு
உற்றவர் ஏதும் செய்ததை அறியேன்
பெற்றவர் மீது போடுங்கள் பழியை - தமிழ்
கற்றோரே புரிந்திடுங்கள் என்நிலையை
வற்றாத சுகபோக நதியிலே நீந்துவோர் - என்றோ
வெறுப்புடன் நாடு திரும்பவே வேண்டும்
சிற்றறிவுடைய என் மனத்தில் எழுகின்ற
சிறிய ஞானத் தீர்க்க தரிசனம் இது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விதி

வானத்திலே இரவில் பூக்கின்ற
வான்நிறை நட்சத்திரப் பூக்களை
எண்ணிப் பார்க்க முயல்கின்றேன்

சிலவேளை
நட்சத்திரப் பூக்களை எண்ணிவிட்டாலும்
எண்ணிவிடலாம் - ஆனால்
எனக்கு விதிக்கப்பட்ட
எண்ணிறந்த பெண்ணடக்கு விதிகளை
எண்ணிடவே முடியாதம்மா!

என் வாழ்நாள் முடிந்தாலும்
இது எண்ணமுடியாத தொன்றே!

வானத்து நட்சத்திரம் வந்து வந்து
இரவிலே பிரகாசிக்கும்
ஆனால் என்னிதய மலரோ
என்றும் மலர்ந்தபடி
நாட்களை எண்ணியெண்ணி
நாட்கள் நடந்ததுதான் மிச்சம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் வரனுக்காக
நாலுகாசு நாளொன்றுக்குச் சேர்த்தாலும்
அந்த ரொக்கம் வந்திடாதே.

அதற்கிடையில்
நானாவித ஆசையெல்லாம் நாளுக்கு நாள்பெருகி
நிறைந்து முட்டிட நாணிய பருவம் நீங்கி
குமர் முற்றி முருக்கமரமாகும் நிலை!
கருமம் எம்மினப் பாவையர்க்கே
கிறுக்கி வைத்த கலாச்சாரச் சட்டவிதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதான வெண்புறாக்களே!

சமாதானம் தேடும் வெண்புறாக்களே!
தூது சென்றிடுங்கள் உலகெங்கும்
சமதரையில் அமர்ந்துண்டு
சுதந்திரமாய்க் காலூன்றி நடக்கின்ற
சுயேட்சைப் பூமி வேண்டுமெனச்
சுற்றி எங்கும் செப்பிடுங்கள்!

அணுகுண்டு வேண்டாம், அணுவாயுதம் ஏந்த வேண்டாம்
போர் மேகங்களே அகன்றிடுங்கள்!

நீங்கள் பொழிவது இரத்தமழை அல்லவா?
பூமியைச் சிவப்பாக்கிப் பார்த்த பயன் என்ன?

விஞ்ஞானம் என்று உயர வளர்ந்து - இன்று
பூஞ்சனம் பிடிக்கிறது பூமியிலே.

கடற்பரப்பிலே கழிவுப் பொருட்கள்
காடுகளோ மரம் வெட்டலால் வெட்டவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனின் ஓஸோன் படலத்திலே
எரிவிழுந்த துவாரம்.

சமாதானப் புறாக்களே!
மனிதச் செயலால் மாசுபடும் சூழலை
சுத்தம் செய்திடத் தூது செல்லுங்கள்!
மறுக்காது சென்று
மானிடம் வாழும் இடமெல்லாம்
மறந்திடாமற் சென்று உரைத்திடுங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசு நிழலினிலே

பூவரசு நிழலினிலே
புதுப்பாட்டுக் கேட்கிறது!

காவலரண் ஏதுமற்று
குளிர்மைத் தென்றல் வீசிடவே
பாவலரின் கவிச்சமையலிலே
பைந்தமிழ்ப் பாடல் பொங்குகிறது!

கூவிடும் குயிலினங்கள் எல்லாம் - தம்
குரலினை வென்றிட்ட ஓசையோவென - இப்
புதுப்பாட்டைக் கேட்டுவிட்டு
பழகிய வேப்பமரத்தையே மறந்தனவே!

பூவரசு நிழலினிலே பழகிய எம் சூழலிலே - நாம்
பிறந்த கிராமப் பண்ணுடனே ஒலிக்கின்ற
புதுப்பாட்டுக் கேட்கிறது!

புதுப்பாட்டுத் தரும் செய்தியிலே
புத்தம் புதுமலர்ச்சி பூக்கிறது நம் உள்ளத்திலே
பிறக்கவிருக்கும் தமிழீழ தாயகத்தின்
புதுவரவை வரவேற்றிடவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவையரின் சமூகத்திலே
புதுச்சீர்திருத்தம் தோற்றிடவே - தாய்ப்
பூமியின் வளம் பெருகிடவே
புகுந்தினிமை தருகிறது நம் செவிகளுக்கே!

பூவரசு நிழலினிலே பழகிய எம் சூழலிலே - நாம்
பிறந்த கிராமப் பண்களிலே ஒலிக்கின்ற
புதுப்பாட்டுக் கேட்கிறது!

பொழுதுகள் நல்லனவாய்ப் புலர
பூவரசமிலைகள் எல்லாம் காற்றிலாடி
ஆவலொடு தம்கரம் அசைப்பதைப் பாரீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமாற்றம்

வீட்டுக்குள்ளே ஒருவனாக இருந்து பழகி
விருந்தாளியாக இல்லாது - உண்மைக்
குடும்ப அங்கத்தவனாகியே இணைந்து - பின்
எடுப்பார் கதைகளை நம்பி
அடுத்துக் கெடுக்கும் மக்களும்...

உதவி செய்கிறேன் என வந்து
உள்வீட்டு விடயங்களைத் தெரிந்து
அம்பலத்திலே பறக்கவிட்ட பாதகரும்...

உண்டு உறங்கி ஒன்றாயிருந்து
பணம் கையில் வந்தவுடன் பாச நேசம் மறந்து
குணம் குறி மாறி இனம் மறந்து
செய்ந்நன்றி தனையும் மறந்து - பிறர்
செய்ததையும் பழித்துக் கூறி
நட்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி
நீதியை மறந்த கயவர்களும்...

தான் வாழ்ந்தால் போது மென்றே
தன் சுயநலத்தையே பேணிவரும்
தன் கரும விரும்பிகளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை மறைத்துவிட்டு
பொய்விதை தூவி நீரூற்றி
பொய்மையினை வாய்மையாக்கியே
வதந்திகளுக்கு உயிரளித்து உருவம் கொடுத்து
நிதம் அதில் இன்பம் காணும் நயவஞ்சகர்களும்...

மலிந்து விட்ட ஒரு இடம்
மெலிந்து வந்த தஞ்சம் புகுந்து
தற்காலிக சுகத்தில் திளைத்திருக்கும்
வெளிநாட்டுத் தமிழர் வாழ்க்கை.

சமரசம் உலாவும் இடம் போலிங்கு
சமத்துவ உரிமை தமிழர்க்கு - ஆனால்
தமிழர் மனதில் அது இல்லையே.

அவர்தம் மனதிலே உதிக்கும் எண்ணங்களும்
பலரகம் என்பதால் தான் இன்னும்
தமிழருக்கு ஒருவிடிவு இல்லையோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிப்பருவம்

குளிர்காலம் மனதுக்கும் இருள்காலம்
குதூகலமாய்த்திரிந்திட
உடல்குறுகும் குளிரில் நடுங்கும்!

இறுக்கிப் போட்ட உடைகளால்
உடல் நெருங்கி அழுத்தப்பட்டு
உளம் சோர்வடையும்!

காலில் மாட்டிய அணிகள்
கழுத்திற் கட்டிய சால்வைகள்
இன்னும் பல அணிவகைக்குள்
உடல் அகப்பட்டு
மூச்சுத் திணறுவது ஒரு பக்கம்!

பனியின் கொடூரத்தால்
வாயில் புகை குளிராய்ப் பறக்க
உள்ளுடம்பில் குளிரேறி உடலைப் பதற வைக்க
பார்க்கும் இடமெல்லாம் பனிப்படலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பட்டு எங்கும் விரிக்க
ஒதுக்கிடம் நாடிச் சூட்டை விரும்பி
தம் இருப்பிடம் தேடி ஓடி ஒதுங்கிடும் மக்கள்!

குளிர்விறைப்பாலே - சிலவேளை
குடிவகைகள் விறைப்பகற்றும் பானமாகிட
உணவும் வெறுப்பாகும் சிலருக்கு!

சூடான பானத்தை மனம் நாடும்
வெளியில் சென்றுவர விரும்பும் தேவை நிறைவேற்ற
வேண்டா வெறுப்பாக மனம் மறுக்கும்!

வெளியில் சனநடமாட்டம்
இந்நாட்களிலே வெகுமட்டம்
வீடுகளெனும் கூட்டுக்குள்ளே
மானிடப் பறவைகளின் ஒதுக்கம்!

பனிக்காலம் என்றால் எம்மவர்க்கோ
பிணிக்கோலம் இது உண்மை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டவிழ்ப்பு

மேனாட்டு மங்கையர் உலகிலே
ஆடைக்குறைப்பு
உடலுக்கு விடுதலை!

கோடைகாலம் வந்திட்டாலோ
கூட்டிலிருந்து தப்பும் பறவை யென
உடம்பினுக்கு ஓர் விடுதலை!

அரைகுறை ஆடைகள் உறவாடி
மேனிகளின் வனப்புக் காட்டும்
சிற்றிடைகளோ உடைகண்டு நாணும்
சிற்றுடை அவசியமா?
முக்காலுக்கு மேல் திறந்த மேனிக்கு என
முணுமுணுக்கும் ஆடைகள்...

சிட்டுக் குருவிக்குக் கட்டுப்பாடு இல்லை - இங்கு
கட்டும் உடைக்கும் அதில்லை.
கோடைகாலம் ஆடைக்கு விடுதலை!

சூரியக்கதிரின் கண்களுமே
வெண்புறாக்களின் மென்னுடல் வனப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கிப் பித்தாகி
கரிய வுடலாக்கும் காம வெப்பத்தால்
ஆடைகளின் அலங்காரங்கள்
அணிந்திருக்கும் அலங்கோலங்கள்
பூங்காவனக் காட்சியாகத் தோன்றும்
கீழைத்தேயக் கண்களுக்கு!

வாளிப்பான உடலிலே
ஆடைகளின் அதிகுறைப்பால்
கதிரவன் ஒளியும் வளியும்
தாராளமாக உள்ளே உலவி வரும்
எங்கும் இல்லாத விடுதலை!

மானங் காக்கும் உடைதனில்
மேனாட்டில் பார்த்திடலாம்
மேனிகளை அளந்திடலாம்
அளவு நாடா வேண்டாம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலச்சக்கரம்

சூரியக்கதிர் வருமுன்னே - காலைக்
கருமந்தனை முடித்தே
கணவனும் மனைவியும் - வேலைத்
தளத்தை நோக்கி விரைவு
வெள்ளைத் தோல் மத்தியிலே - சில
கருநிறத் தோல்களாய்...

வேற்று மொழிச் சலசலப்பிலே - விளக்கம்
அற்றே தம் எண்ணங்களுடன்
பழக்கமிலாக் காலநிலைக்குள்ளே - வலிந்து
பழக்கிய இசைவாக்கம் பெற்று
போகின்றார்; வருகின்றார் - நாளையும்
சுழல்கிறது இச்சக்கரம்!

பேருக்குக் கணவன் மனைவிதான் - ஒன்றாக
இருப்பதோ உரையாடுவதோ அருமை!

வேலை வேலை என்றிட்ட வேலையே - ஒரு
வாரத்தின் பின்னே இருவரின் சங்கமிப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரமாய்ச் சுழலும் வாழ்வோட்டம் - இதனால்
இதயத்து அன்பு நீரும் வற்றும்!

வேலைப்பளு மூளையை நசுக்கிட - அது
காய்ச்சும் இதயத்து ஈரத்தை
வெளிநாட்டுப் போக வாழ்க்கை - அது
வெளிப்படுத்தும் எப்படி என அனுபவித்தோர்க்கே!

பட்டால் தெரியும் நெருப்பு - அது
சுட்டாலும் தெரியும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த மனிதம்

மரபை மீறினான் மனிதன் மதிகெட்டான்
மரியாதைபோக மனிதனை அவமதிக்கிறான்!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது
யார் இவர்? என்ற காலம் இப்போ?

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வென்பது
ஒன்றிவிட்டால் மோசம் என்றானது!

ஒற்றுமைக்குலைவு; குடும்பம் கலைவு
அன்றைய மனிதன் மிருகத்தைக் கொன்றான்
இன்றைய மனிதனோ தன்னினத்தைக் கொல்கிறான்!

வாழ்க்கையில் அறிவியலில் புதுமை - அதனால்
மனிதமனங்களும் கல்லானதும் புதுமை!

அறிவியல் உலகு இயந்திரமனிதன், இதயமற்றவன்
அவசரவாழ்வு இயந்திரங்களுடன் தொடர்பு
மனிதம் எங்கே மலரும்? இயந்திரத்துக்குள்ளே!

புதுமை! புதுமை! பிள்ளைப் பாசத்தைப் பெற
பிள்ளைக்குப் பத்து நோட்டுக் கொடுக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதாதையர் வாழ்வில் அன்புணர்வுக்கும்
அரவணைப்புக்கும் பஞ்சம் இல்லை!

முன்னோர் மரபில் முறைமை இருந்தது
காலமாற்றம் கருத்தினை மாற்றிட - அது
காலனாகி மனிதத்தைக் கொன்றது!

அறிவியல் வளர ஆண்டவன் சக்தி தேய
நெறிகள் மாறின புதியன புகுந்ததால்
விதிகளை மாற்றினர் விளக்கம் தந்தனர்
பொறியில் அகப்பட்டது நிம்மதிச் செல்வம்!

முன்னோர் மரபை மாற்றினர் புதுமை காண,
வந்தது புதுமையான விந்தை உலகம்!

பூமிப் பந்தில் பற்கல கண்டுபிடிப்புகள்
அன்று கண்டிராத அற்புத விஞ்ஞானம்!

கொடிகட்டிப் பறந்திடவே - மனிதன்
தன் வாழ்க்கையைத் தொலைத்தான்
வசந்தத்தை இழந்தான்; அன்பெனும்
உணர்வு நரம்பையே துண்டித்தான்!

விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சியாலே - ஈர
நெஞ்சுள்ளோர் நஞ்சாகினர் இன்று
அறிவியலை வளர்த்த விஞ்ஞானம் - இன்று
பறித்தது மனிதனின் மக்கட் பண்பையே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக்காய்ச்சல்

மானிடரில் ஒற்றுமையாய்
மற்றவர்க்கு மற்றவர் ஆதரவாய்
மகிழ்ச்சியுடன் வாழ்வதுதான்
மேதினியிலே எமக்கின்பம்!

உடல் இயக்கமற்றோருக்கு
உள்ளம் நலிந்தோருக்கு
உளமுவந்து உதவுவதுதான் உதவி!

அது தினையளவாயினும்
பனையளவு பெரிதெனக் கருதுவர்
அதன் பயன் தெரிந்தோர்!

இத்தகையோர்க்கு உதவிடும் போதில்
உதவியோர்க்கு ஆத்மதிருப்தி!

செயற்றிறன் இருந்தும் செய்ய மனமற்று
சோம்பேறிகளாக வாழ்வோருக்கு
உதவின் பயனைப் புரியாதவருக்கு
புரியும் பக்குவம் இல்லோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணப்பலமும் பேச்சுப்பலமும்
படைத்தவர் நாமென்று நினைக்கும்
மட்டற்ற மமதை உடையோருக்கு
உதவிடும் போதிலங்கே
உதவியோர் பெறும் பயன்
உபத்திரவம் மட்டுமல்ல
உபாதைகளும் பல நூறு
உள்ளக் காய்ச்சலும் இனிவேறு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரத்துவிடியல்

தேன் சொரியும் நம் தாயகத்திலே
கானல் நீர்தான் கண்ணுக்குத் தோற்றம்
வான் முட்டப் போர்ப்புகை - அங்கே
உடல் ஊனமுற்ற சனத்தொகை!

வனப்பிழந்த மங்கையென
கன்னம் வெதும்பிக் கருகி நிற்பதுவோ
கன்னல் மொழியெனும் கன்னித்தமிழவள்
பன்னரிய பாடல் கொண்ட பாவையிவள்
தன்னரிய பொலிவிழந்து தவிக்கிறாள்!

மன்னர் முடிபட்ட கழலுடைய
மாண்பு மிகு தமிழ்ப் பெண்ணாள்
மனம் குமுறுகிறாள் தன் மகிமை இழந்தே!

கன்னித்தமிழ்ப் பெண்ணோ - இன்று
கசங்கிய மலரெனப் பொலிவிழந்து மணமிழந்து
கருகி நிற்கும் கோலம் ஐயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண நிறங்கள் இணைந்து
வாடாமலரென நறுமணம் கமழ்ந்து
வான்புகழ் பெருமைதனை
வரித்துக் கொள்ளும் நாளெப்போ?

தமிழன்னை பெற்ற மைந்தரங்கே
தாயற்ற சேய்களாக தரித்திருக்க இடமின்றி
தீயாக உளம் சுட்டெரிய
தூரத்து விடியலுக்காக அரும்புகின்ற
தொடக்கவிழா நடக்கிறது அங்கே!

தனித்தமிழீழம் துரிதமாய் கிடைக்கும்
எம்மினத்தின் மனத்துளிர்ப்பும் இதுவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைதன்னைச் சாடு!

பகைத்தன்னைச் சாடு - அன்புப்
பாதையைப் போடு!
நகை தன்னைப் போடு - பெண்ணே!
நளினமாய் அளந்துபோடு!

வகைவகையாய் உண்டுவிட்டு - இங்கே
வீரப் பேச்சால் ஏது பயன்?
தொகையாகப் பணம் சேர்த்து - கண்
தெரியாது நடப்பது உனக்கும் கேடு!

தகைமையிலே நீ நம்பிக்கை வை! - மகனே
தகர்த்திடுவாய்! உன் தாழ்வையெல்லாம்
மிகையாய்ச் சொல்லவில்லை மகனே! - உன்னுடன்
சாய்கையிலே தாய்மண்ணிலே இணையவேண்டும்!

நம்மிடையே ஒற்றுமையைத் தேடு - தம்பி
நாட்டு விடுதலைக்காய் நீ பாடுபடு!
எம்மதமும் சம்மதம் என்று பாடு - என்றும்
எளிமையே உனக்குத் தோழன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியற்ற நம்மீழத்தைப் பார்! - அங்கே
நிர்க்கதியானோம் என நினைத்து நட!
சும்மா இருந்து உணவுண்டு - இங்கே
சுகபோகத்தினால் உனக்கேது தாய்நாடு.

அம்மா அப்பா தனை இழந்து - அனாதையாய்
அலையும் சிறுவரைப் பார்! அன்னை நாட்டிலே!

நம்நாடு நம்மொழி நமதினம் - என்றே
நாளும் நினைத்து வாழ்ந்து விடு!
பகைதன்னைச் சாடு - அன்புப்
பாதையை அங்கே போடு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய மலர்

அவள் இதயமலர் விரிகிறது
இளமையுடன் மணத்துடனே
இதயமலரின் மகரந்தக் கவர்ச்சியால்
மானிட ஆண் வண்டினங்கள்
அவள் பக்கம் தலைநீட்டல்
வண்டினங்களின் சுயநல ஆசைக்கு
வடிகாலாக அவளில்லை
வந்து வந்து அமர்ந்து போக
அவள் ஆற்றங்கரை அரசமரமல்ல.
மகரந்தத்தைச் சுவைக்க வரும் வண்டின்
தரம் காணும் புதுமலர் அவள்.

மலருக்கு மலர் தாவும் வண்டினம் போல
சுகம் தேட வரும் மானிட வண்டுகண்டு
அவளிதய மலர் கூம்பிவிடும் - ஆனால்
தன்மீது சொரியும் தேனினைப் பருகிட
தகுதி எந்த வண்டுக்கு உண்டென
அறிந்து அந்த இதயமலர் மகிழ்ந்து
தன்னை அர்ப்பணிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு வந்து தேன் குடித்தது அக்காலம்
வண்டைக் கண்டு நெகிழ்ந்து
பூக்கள் விரும்பினாற் தான்
தேனைச் சொரிந்தளிப்பது இக்காலம்
ஆதலினால்
தேனைப் பருகும் வண்டினங்கள்
காத்திருக்க வேண்டும்
மலரின் சம்மதம் பெற்றிட
எதிர்கால நிலை இதுவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கோப்பு

மாப்பிள்ளை பெண்பார்க்கும் படலம் ஒன்று.
விலைமாட்டைப் பார்ப்பது போல - ஆனால்
விலை பேசப்படுவது பெண்ணையல்ல
விலை பேசித் திருமணச் சந்தையில் நிற்பது
மாப்பிள்ளை எனும் கடாக்கள்
தொகையாகக் காசைக் கொடுத்து
அந்த மாப்பிள்ளை வாங்குவதற்கு சுபமுகூர்த்தம்
ஒழுங்கான ஒரு திருமணவிழா.
வீடு காணி காசு என்றும் கொடுத்து
மாப்பிள்ளையை வாங்கவிருக்கும் பெண்.

ஏன் ஒரு தடவை?
தான் கொடுத்த விலைக்கு ஏற்ற மாப்பிள்ளையா?
என முன்கூட்டி அறிவதற்கு
மாப்பிள்ளை பார்க்கும் படலம் என்ற
ஒரு சடங்கை ஏற்படுத்தக் கூடாதா?
மாப்பிள்ளை பார்க்கும் படலம் பெண்ணுக்கில்லையா?
பெண்கள் என்ன கோவில்மாடா?
எதற்கும் தலையாட்டவேண்டும் என்ற
எமது சமுதாயக் கட்டுக்கோப்பு.
கட்டுக்கோப்புகள் காலச்சுழற்சியால்
சூழலறிந்து கட்டவிழ்க்கப்பட வேண்டியவை.



# பட்டாம்பூச்சி

கட்டுப்பாடற்று களித்துத் திரிந்த நினைவுகள்
கவலையற்றுச் சிட்டுக்குருவி போலக் கானம்பாடி
கும்மாளம் இட்டுக் குதித்துப் பாய்ந்த நாட்களுடன்
குழந்தைப் பருவம் குதூகலமாய்ச் சென்றது.

உடல் மாற்றங்கள் ஏற்பட உணர்வு மாற்றம் - குழந்தை
உடை கழற்றி குமரி உடை அணிந்திட்டேன்
தடைகள் பல எனைச் சுற்றி வளர்ந்திட - ஆதிக்கக்
குடைக்குள்ளே அகப்பட்ட பட்டாம்பூச்சியானேன்.

எங்கே போகிறாய்? ஏன் போகிறாய்? எதற்கு அலங்காரம்?
இங்கே இரு! இனி அப்படி ஒன்றும் செய்யாதே!
எங்களுக்கு எது செய்வது என்று யாவும் தெரியும்
தங்கையைப் பாழாக்காதே! வீட்டிலிரு பேசாமல்.

இனி எனக்குப் பாதுகாப்புத் தேவையாம்
வெளியில் போகத் துணையும் தேவைகளாம்!

நான் பல இலட்சம்பணம் வைத்திருக்கிறேனா?
கள்வன் வந்து திருடிச் செல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண வயது வந்த சிறுமி நான்
எனக்கேன் வீட்டில் கட்டுக்காவல்?

யாரும் அபகரிக்கக் கூடிய பொருளென
எதைத் சமுதாயம் எனக்குத் தந்துள்ளது?
இந்த உடலின் இயற்கை மாறுபாட்டையா?
அதுதான் பறிபோகப் படும் பொருளா?
எதுவோ எனக்கெல்லாம் பூச்சியம்
ஏதும் அறியாச் சிறு பெண் நான் அதனால்
என்மனதில் இவ்வாறான வினாக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்றவள்

பெண்ணே!
நீ வேலையற்றவளா?
உன்னை வேலையற்றவள் என்றால்
வேலையுள்ளவர் யார் இவ்வுலகில்?

காலம் பூராவும் இரவுபகல் பேதமின்றி
உன்னுழைப்பைச் செலுத்துவதனால்
இயங்குகிறது இவ்வுலகம்!

நீ ஜனனித்த நாட் தொடங்கி
மரணிக்கும் நாட்கள் வரைக்கும்
வேலை என்று சொல்லாமற் செய்யும்
சேவைகள் கடமைகள் எத்தனையெத்தனை?

எத்தனை பதவிகள் உன் வாழ்க்கையிலே
உன் சேவைக்குக் காசில்லை
ஆதலால் தானோ நீ வேலையற்றவள்!

காசு சம்பாதிக்கும் பணி
இதுதான் வேலை என்ற தத்துவமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உடலுழைப்புக்கும்
மன உழைப்புக்கும் ஊழியத்தொகை இல்லை!
நாடோறும் இயக்கிவிட்ட இயந்திரமாக
நிறுத்தமற்று இயங்கிக் கொண்டிருக்கிறாய்!

உனது இயக்கம் குடும்பத்தின் இயக்கம்
குடும்பம் இயங்கினால் சமூகம் இயங்கும்!

மனைவி வேலைக்குப் போகிறாவா?
இல்லை... இல்லை... வீட்டில்தான்
ஓ...வீட்டிலே சும்மா இருக்கிறா
என்ன பவிசான பதில்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியக்கதிர்

கட்டிலென்றும் தொட்டிலென்றும் அட்டிலென்றும்
மட்டற்ற வேலைகள் மாதருக்கு இவ்வுலகிலே
சிட்டென்றும் பட்டென்றும் பல்லவிப் பாடல் நீங்கி
நெட்டைத் துவக்கெடுத்துப் போரிடும் .காலமிது.

ஆடவர் கண்ணைப்பறித்து கருத்தை அழித்த பெண் இன்று
நாடற்ற நிலைநீங்க தாயகத்துக்காகப் போராடும் போராளி!
பாடாத குயிலவள், ஆடாதமயில் அவள் ஆனால்
மாடாக உழைக்கிறாள் வேலையற்றவள் என்ற விருதுடனே!

நெடுமூச்செறிந்து கைபிசைந்த காலம் அன்று - பெண்ணே!
அடுப்பூதி அடக்கம் எனும் ஆபரணம் அணிந்த நீ
விடுபட்டு வெளியே வா! புதிய உலகத்திற்கு - உன்
சுட்டும் சுடர்விழிகள் எரிக்கும் சூரியக்கதிர் எனக்காட்டு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம்

என் இதயச் சிறைக்குள் புகுந்தவன் நீ
உன் நினைவால் உடலியக்கம் பெற்றவள் நான்!
நின்முகம் பார்த்து என்றும் என் வாழ்க்கை கழித்திட
வன்மையாய் நின்றதும் நீ அறிந்ததல்லவா?

கண்ணுக்கு மைதீட்டுவதை நான் மறந்தேன்
கண்மணியாய் இருக்கும் நீ கரைந்து விடுவாய் என்று!

எனது மனக்கிடக்கையை எவ்வாறெல்லாம்
நினது மனதுக்குப் புரியவைத்தேன்!

நீயோ தலையாட்டி மௌனமாயிருந்தாய்
அது சம்மதத்தின் மௌனம் என்றிருந்தேன்
இது சொப்பனமல்ல நிஜமென்று நினைத்தவேளை
விசுவாமித்திரர் போலாகிவிட்டாய் நீ!

மேனகையைக் கண்டு நிலைகுலைந்த விசுவாமித்திரராக
நீயும் சீதனப் பெண்ணைக் கண்டு குழம்பிவிட்டாய்
என்னை நீ மறந்து சீதனம் கொண்டுவரும்
கன்னியிடம் உன்மனம் அலைகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனத்திலோர் கேள்வி
நீ குடும்பம் நடத்த விரும்புவது பெண்ணுடனா?
அல்லது சீதனமெனும் மங்கையுடனா?
புரியவில்லையே!

உன் செய்கையாலே நான் மௌனம் - என்
மௌன மொழி புரிந்து எனைப் புரிபவன்
வரும்வரைக்கும் மௌனமாகவே இருப்பேன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளா?

மோகனப் புன்னகை உதிர்த்துவிட்டாய் மகளே! - இந்த
கானகத்துக் குயில்களின் பாட்டு இனிமையாக
தேனாகத் தருகின்ற உன்வார்த்தை இன்பங்கண்டு
தானாகக் காதலிப்பர் ஆடவர் ஒருதலைக் காமமாக!

கண்ணே! மணியே!. நீயின்றி நானில்லை - இந்த
மண்ணில் நீயில்லாத வாழ்வும் ஒரு வாழ்வா?
விண்ணே உடைந்திடினும் விடேனுன்னை - என்றவர்
கொண்டுவா சீதனம் என்றார் இன்று கொடுமையிதன்றோ?

தங்கம் ரொக்கம் எனத் தரமற்றுக் கேட்போரை
அங்கம் வருந்தி உழைக்காத அவர்களை வாங்குவதற்கு
நாங்கள் என்ன சாசனம் எழுதிய அடிமைகளா?
பங்கும் கேட்டிடுவர் நம்வீட்டுச் சொத்துக்களில்!

என்னதான் மாற்றம் சமூகத்தில் வந்தாலும்
என்றும் மாறாதிருப்பது பெண்ணுரிமை விதிகளோ?
இன்றைய வளர்ச்சிக்கு ஏற்ப பெண்ணுக்கும்
உண்மையில் உரிமையைத் தாருங்கள் உலகினரே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி

மங்கையராய்ப் பிறந்ததினால் - மனம்
மெலிந்து தளர்ந்து ஏங்குவதேன்?
தங்கு புவியியல் வளர்ந்திடும் அனைத்திலும் - உள்ள
தாய்மையின் சுவடாக நிற்பதும் நீயல்லவோ?

அங்குமிங்கும் அலைந்து உழைத்து - இல்லத்தில்
அன்பை வளர்த்துப் பிணைப்பவர் யார்?
எங்கும் எதிலும் துணைவன் புகழ் விளங்க
இரவு பகலாக உழைப்பது யார்?

சிந்தை கலங்கினால் துணைநின்று - உளத்தில்
சாந்தத்தை ஊட்டி ஆதரவளிப்பதும்
வந்த நோய்கள் ஓடிமறையவே - பக்கத்தில்
வந்திருந்து பேணுவதும் யாரோ?

கந்தன் வேலனெனக் கடவுளை வணங்கி - குடும்பம்
கவின் பெறச் செய்து காத்திடும்
பந்தம் யாரென்று உணராத நாயகனே
பத்தினியின் சேவைக்கு என்ன கைம்மாறு? கூறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து வருமுனக்கு உற்சாக மூட்டி - அன்பு
சொரிந்து ஆதரித்து உணவு அளித்து
வார்த்தைகளற்ற காதலின்பம் கனிந்து வழங்கும்
வகையினர் இல்லையாயின் உன்கம்பீரம் எங்கே?

அடுக்களையைப் பேணி அரசியற்பணியும் புரியும் - ஒரு
அபாரத்திறமையை மதியாமை ஏனோ?
இடுக்கண் களைந்து இல்லறம் சிறக்க வைக்கும்
இந்த மங்கைப் பிறப்பை மிதிப்பதேனோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மலாட்டம்

மாந்தளிர் மேனி மையலூட்டும் உருவம்
சேர்ந்த பெண்ணிவள் என்கருத்தை அழித்தவள்
பைந்தமிழ்ப் பாவையவள் என்வாழ்வில்
சாந்தத்தை அளித்து எனக்குத் துணையாவாள் - என
சிந்தையினிக்கச் செப்பிய காதல் வார்த்தைகள்
சந்தனமாய் மணத்தது காதலி மங்கைக்கு
சந்திப்புக்கள் பல பெருக காதலிலே உறுதியாகி
பந்தங்கள் ஆயினர் சதிபதியாக!

சொந்தங்கள் வெறுத்தபோதும் - தமது
சிந்தை கலங்காமல் சீர்வரிசை வேண்டாமல்
சுந்தரப் பெண்ணை மணமுடித்தவனுக்கு
அந்தரத்தில் மனம் அலைய
போவோர் வருவோர் வாயில் அவன்கதை.
இவ்வளவு படித்துப் பதவி வகித்தும்
இம்மியும் சீதனம் வேண்டாமல் இவன்
ஏன் திருமணம் செய்துவிட்டான்?
இவனுக்கு அங்கத்தில் ஏதும் குறை போல
ஆதலினால் அதை மறைக்க
சீதனம் கேட்காது செய்துவிட்டான் கடிமணம் -என
அசைபோடப்படுகிறது ஊர்வாயில் அவன்கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தாலும் அழகாலும் தன்னைக் கவர்ந்தவளை
சீதனம் சீர்வரிசை எதுவும் நாடாமல்
மணந்ததினால் ஊர்ப்பேச்சு இப்படி!

மணவாளனாகச் சீதனம் வாங்கினாலும்
மாறாக வேண்டாமல் மணந்தாலும்
ஏசுகின்ற மூடச்சமூகமே!
உன் வாய்க்கு இல்லையா பூட்டு?
ஆடுகின்றாய் பொம்மலாட்டம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருப்படுமா?

பெண்ணுக்கு நீதி கேட்பார் மேடையிலே
கண்போன்றவர் வீட்டிற் பெண்களென
எண்ணற்ற விதந்துரைகள் செப்புவர் - வீட்டில்
பெண்களையே பின்னுக்கு வைத்திடுவர்!

"பெண்டுகள் சமாசாரம்"அப்படித்தான்
உண்மை தெளிவுகள் இல்லை எனவும்
பின்னே தள்ளிடுவர் பெண்கருத்தை!

என்ன பேசினாலும் ஆண்உரிமை
என்றும் உள்ளது உள்ளதுதான்
மின்னும் தங்க ஒளியினைப் போல்வர்
ஏதுவரினும் ஆணுக்கு மாசில்லை
இது நம் சமுதாயம் இட்டசட்டம்
இதை நீக்க இல்லைப் புதுச்சட்டம்
அது ஆணுக்கென சமுதாயம் கீறியவட்டம்.

நாளைக்கு ஒருவன் கைப்பிடித்து
நம்மை விட்டுப் போகிறவளுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்குப் படிப்பும் அறிவும்? எனக்கூறும் சமூகம்
நாளைக்கு அவள் நாலுபிள்ளை பெற்றதும்
நூலறிவைப் பிள்ளைக்கு எப்படிப் புகட்டுவாள்?
எனச் சிந்திப்பதில்லையே!

ஒரு பிள்ளையின் ஆரம்ப அறிவுகள்
அன்னையிடத்திலே தான் ஆரம்பம் என்பதனை
அறியாத சமூகம் உருப்படுமா?
அறிவு வளர்ச்சி உருவாகுமா?
பானையிலே இருந்தால் தானே
அகப்பையிலே வரும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் எழுதிய வேதம்?

கருவறைக்குள்ளே பெண்சிசு ஒன்று
உருவானதுமே ஊகங்கள் பல
கருத்தரித்த தாய்மையின் ஏக்கங்கள் பல
பெண் குழந்தை என்றபடியாலே
பேசாமலிருக்கிறது தாயின்வயிற்றில் பெண்சிசு!

அதிரச் செய்யும் அடி உதை இல்லையாம்
ஆண்குழந்தை என்றால் படுசுட்டி
அடிக்கடி உதைப்பானாம் தாய்வயிற்றை
அதிலே தாய்மையின் இன்பம் பன்மடங்காம்!

கருவிலேயே ஆண் பெண் பேதங்கள்
அரும்புகிறது ஆண் பெண் சமமல்ல என்ற
கருத்துக்களின் மூலவியாக்கியானம்
குஞ்சு தரும் முட்டைக்கருவிலோ
குட்டி ஈனும் மிருகத்தின் கருப்பையிலோ
ஒட்டவில்லை ஆண்பெண் பேதம்
ஆறறிவு பெற்றிட்ட மானிடத்திலே
ஊனொடு ஊறியதோ இப்பேதம்?
யார் எழுதிவைத்த வேதமோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நப்பாசை

பரந்து விசாலித்திருக்கும் - எமது
புத்தம் புது கல்வீட்டுச் சூழலும்
அகலவிரித்துள்ள எங்கள்
எட்டு ஏக்கர் வீட்டுக்காணியும்
என் உணர்வைப் பொருத்தவரையில்
"கொங்கிறீற்" போட்ட சிறைக்கூடமே!

அம்மா எனைப் பார்த்துச் சொல்வார்
ஒழுங்காகச் சமையலைப் பார்! - உனக்கு
விருப்பமில்லாவிட்டாலும்
மற்றவர்களுக்காகச் சமைத்துப் போடு!

அப்பவோ,
உனக்கு ஏன் வெளிநடப்பு?
வீட்டு அலுவலைக் கவனி என்கிறார்,
குமர்ப்பிள்ளை நீ சனம் நாலாய்க் கதைக்கும்
என்று பொருமுகிறார் எனைப்பார்த்து!

உலகம் அறிந்த அண்ணாவோ,
ஏன் தெருவுக்குப் போகிறாய்?
என்ன வேண்டுமானாலும் தம்பி இருக்கிறான்
உனக்கு ஏதும் விரும்பினால்
வீட்டில் எத்தனை வேலைகள்
எனது 'ஷேட்டை' ஸ்திரிக்கை செய்து வை!
எனப் பல கட்டளைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தம்பி எனைப் பார்த்து பரிதாபமாய்
துன்பத்தைத் தவிர் அக்கா!
உனக்கு கடையில் என்ன தேவையோ, சொல்!
இந்த நிமிடம் வாங்கி வருவேன்
என்று கூறி அவனும், அவனை அறியாமலே
வீட்டில் இரு! என்கிறான்

அக்காவின் மகன் கூட
ஆண்மகன் தான் என்பதினால்
அன்ரி! நீங்கள் வெளியே போவதாயின்
உதவியாக நான் வருகிறேன்
வழித்துணைக்கு நான் கூட வரவேண்டும் - என்று
அவனும் எனக்குக் காவல் தருகிறான்.

தங்கையும் நானும்
தன்னந்த தனிமையாய் இருந்து
சிறைக் கூட வாழ்க்கையைப்
பகிர்ந்து கொள்கின்றோம்!

ஏன் என்றால் அவளும் பெண்,
அதிலே எனக்கு அற்ப சந்தோஷம்
இளையவள் அவளை நான்
இரண்டொரு தரம் ஏசித் திருத்தும்போது
எனக்கு ஒரு மகிழ்ச்சி!

இன்னொருவரில் அதிகாரம் செலுத்த - ஒரு
சிறு உரிமை உண்டென்று
ஒரு நப்பாசை எனக்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாச் சீதனம்

நண்பனே! உன்னிடம் நாளுக்கு நாளாக
நட்புக் கொண்டேன் அறுகம் வேராக - மனதில்
நாயகனாகவும் இருத்திக் கொண்டேன்
நயமாக வளர்ந்து மலர்ந்தது நமதன்பு.

நாயகனே! நீ தான் எனக்கென்றிருந்தேன் - எனது
நல்லதும் கெட்டதும் அறிவாய் என்று - என்
நெஞ்சத்தைப் பிளந்தும் காட்டினேன் உனக்கு
நீயே அதில் நிலையாய் அங்கிருப்பதைக் கண்டாய்!

"பெண்" என்னைப் புரிந்தவன் நீயென
பேதை என் உடலையும் உனக்காக்கினேன் - ஆனால்
பாதகனே! இன்று நீ உன்கொள்கை மறந்து
பணப்பெட்டியைத்திற! என்றாய் சீதனம் கேட்டு.

என்மனப் பெட்டியிலே நல்ல குணமுண்டே
அன்னை அளித்தாள் அழியாச் சீதனம் என்றே
உன் லீலைகளுக்கு என்னை அளித்த பின்பும்
சின்னத்தனமாய்ச் சீதனம் கேட்பது எந்த லீலைக்கு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சாரக் கட்டிடம்

பெண்ணெனும் படைப்பைப் படைத்தான்- ஆண்டவன்
பேதத்தையும் உடன் வைத்துவிட்டான்
மன்பதை பெருகிடப் பெண்கள் என்றான் - பின்னர்
மானிடத்தில் சமபங்கு இல்லை என்றான்.

இல்லறம் சிறப்பது பெண்ணால் என்றனர் - பின்
இரண்டாம் பிரஜை என ஒதுக்கினர் அவளை.
நல்ல சிறப்புகள் யாவும் பெண்ணாலே - இந்த
நானிலம் வாழ்வதும் அவளாலே என்பதை மறந்தாரே.

பெண்ணென்று பூமியிலே பிறந்துவிட்டாலே - பல
பெரும் பொறுப்பு அவளுக்கு எல்லாமே
வண்ணமாய்க் குடும்பம் செழிப்பது - இந்த
வஞ்சியவள் தன்னலமற்ற சேவையினாலே.

பிள்ளைக் கனிதனை ஈன்று பாரினிலே - இன்பம்
இணைந்திடும் இல்லறச் சோலையாக்குவாளே
வெள்ளை மனமுடைப் பெண் வாழ்விலே - அன்றே
வேதனையும் வளர்த்தது பண்டைச் சமூகம்.

பெண்விடுதலை, மகளிர்மலர்ச்சி என்றுபல - உயர்
புரட்சிகள் இன்று வளர்ந்து பரந்தாலும்
பண்டு கட்டிய கலாச்சாரக் கட்டிடத்தையே - இனி
புதிதாய்க் கட்டுவதில் எதிர்ப்படும் பல சிக்கல்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தஸ்து

ஆண் பெண் பேதம் ஏன்?
ஆண் பெண் சிசுக்கள்
உற்பத்தியாவது ஒரே கருவறைதான்
ஆணுக்கொரு கருவறை உயிரியக்கத்தில் உண்டா?
அப்படியாயின் ஏன் மானிடத்தில்
ஆண் பெண் பேதம் உதயமாயிற்று?

ஆண் சிசு தாங்கிய தாய்மையின்
கர்ப்ப காலம் பத்துமாதம்.
அதே போன்று
பெண்சிசு தாங்கிய தாய்மையின்
கர்ப்பகாலமும் பத்துமாதமே!
இப்படியிருக்கையில்
ஆண் பெண்ணில் ஏற்றத்தாழ்வு ஏன்?

ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி
அரும்புகிறது நாட்செல நாட்செல
பத்துவயதைத் தாண்டினால்
துள்ளித் திரிந்த சிறுமிக்கு
பாடபோதனைகள் பதுமையாய் வீட்டிலிருக்க!

அதே வயதுச் சிறுவனுக்கோ
அங்கேயும் எப்படியும் போய்வா! என
அதிகார அமுல் நடவடிக்கைகள்
குடும்ப அரசாங்கத்தால் வழங்கப்பட்டு
கௌரவமும் உயரந்தஸ்தும் கிடைக்கிறதே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான போதனை

எதிர்பாராத சந்திப்பு ஒன்று
ஒருவரை ஒருவர் பறி கொடுத்தனர்
இருமனம் ஒருமனப்பட்டபின்
இடையிலே தடைகள் என் செய்யும்?

இயமனே வந்தாலும் உறவை இரண்டாக்க
இயலுமா? காதல் எனும் புதிய உலகத்திலே
என்றிவ்வாறு பேசிப்பேசி காலங்கழிக்க
ஏந்திழை அவளோ அச்சமேலீட்டால்
திருமணம் செய்வோம் விரைவாய் என்றாள்.

காதல் மங்கையின் அம்மொழி கேட்டு
கருத்துக் குழம்பினான் அக்காதலன்
திருமணம் தானே பெரிய விடயமா? என்று
காலத்தையும் கடத்தினான் ஜொலியாக.

உடல் இணையு முன்பே - நிரந்தர
உறவினில் முதல் இணைவோம்
ஊரறிய மணம் புரிவோம் - என்று
மங்கை நல்லாள் செப்பிட
குங்குமம் தானே உனக்கு வேண்டும்
அதெல்லாம் பெரியவேலையா? - என்று
ஆணழகன் அடித்துக்கூறி நாட்களைக் கடத்த
அந்த வஞ்சகன் மனம் அறிந்துவிட்டாள் மங்கை
அதற்கோர் திட்டம் மனதிற் தீட்டினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் இப்போ வேண்டுமென்றால் - நான்
வைத்தியரை உடன் நாடவேண்டும்
காதலனோ ஏங்குவது போல் நடித்து
கண்மணியே! உனக்கென்ன வந்தது?
என்று நடித்துப்பதறிக் கேட்கவே
மங்கையோ இவ்வாறு சொல்லலுற்றாள்
எனக்கு ஒன்றும் வரவில்லை - இனி
ஏதும் வயிற்றில் வந்துவிடும் என்று
கருக்கதவினைச் சாத்திடவே
வைத்தியர் உதவி தேவை எனக்கு என்றாள்

அவனோ வாயைப் பிளந்து நிற்க
மீண்டும் மங்கை சொல்லலுற்றாள்
கருப்பை என்னிடத்தில் இருப்பதனால் - நீ
தடயத்தைத் தந்துவிட்டுத் தப்பி விடுவாய்
உன் தடயத்தை நான் சுமக்க - நீ
இன்னோர் இடத்தை நாடிச் செல்லவோ?
கருக்கதவுக்கு நான் தாழ்ப்பாள் போட்டுவிட்டால்
உன்னைப் போலவே நானும் தப்பிடலாம் - இது
இருவருக்கும் கனவாய் மறந்துவிடும்
என்று செப்பிய வார்த்தை கேட்டு
ஆண்மை தலைகுனிந்தது.

பேசாமடந்தை பெண்ணென்றிருந்த காலம் போய்
பெண்மை முன்னேறிவிட்டது
பெண்மை விழித்துக் கொண்டது - என
வேறுதிசை திரும்பினான் அந்த ஆடவன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே குலம்

நம்மினத்துச் சுதந்திரத்தின் விடியலுக்காய்
தம்முயிரைச் சுதந்திரத்தீக்கே விறகாக்கி
எம்மண்ணிலிருந்து வீரர் வீரசொர்க்கம் புகுந்து
நம்பிக்கைத் துளிகளுடன் காத்திருப்பர் அங்கே.

துருப்பெடுத்து விளையாடிடும் குளுமைப்பருவத்தில்
துவக்குடனே விளையாடி போர்முனைக் களத்திலே - முன்
விடுபட்ட எம்முரிமைதனைப் பெற்றிடவே
தடுத்த முட்டுக் கட்டைகளைத் தவிடு பொடியாக்கினரே.

தாயகத்திலே தமிழினம் சுதந்திரவிதை புதைத்து - அது
தனித்துவமாய் இடம்பிடித்து விருட்சமாக வளர்ந்து
தாகம் என்ற விடுதலை நிழலிலே இளைப்பாறிட எண்ணும்
திருநாள் எதுவோ அதுவே நம் ஆதங்கம்!

தமிழருக்கு விடிவுண்டு இனிய வாழ்வும் உண்டு - நாம்
தவித்தநிலை எல்லாம் தவிடுபொடியாகி மறைந்திட
துடித்த மானிடம் உயிர்ப்புடன் ஈழம்காண -மன
வெடிப்புகள் அகற்றி தமிழ்ச்சமுதாயம் மலர்ந்திடும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியோ?

சொந்த நாட்டில் சிந்தைகலங்கி
பந்தங்கள் பாதி இறந்து பாதிபிரிந்து
சந்தடி ஓசைகளுக்கு மனம்திகிலுற்று
வெந்தது பாதி வேகாதது பாதியென உண்டு
கந்தனையும் கர்த்தரையும் அல்லாவையும்
சிந்தையிலே ஒவ்வொரு கணமும் நிறுத்தி
அந்தர வாழ்க்கை நம் இரத்தங்களுக்குத் தாய்மண்ணில்
நிரந்தரமானதோ? நிறுத்தப்புள்ளி அற்றதோ?

நாளை விடிவு வரும் நாளை குறை தீரும் என
நாளை எண்ணியெண்ணி வாழ்நாள் முடித்த
ஆட்களுக்கும் கணக்கில்லை
சாலைகள் இடிந்தன சோலைகள் கருகின.
ஆலைகள் நொறுங்கின அமைதி உடைந்தது!
கவலைகள் பெருகின; அபலைகள் உருவாகினர்!
வீட்டுக்கு வீடு வீசிடும்
கொடுந்துயரச் சூறாவளியின் கடுமையினால்
படும்பாடெல்லாவற்றையும் இங்கிருந்து
பாட்டில் எழுதிவிடலாம் - அதைக்
கேட்டு இங்கு நாம் கலங்கலாம் - ஆனால்
அனுபவப்பட்டபோது தான் புரியும்
அன்னை மண்ணிலே நம்மினத்தோர் கதி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லாத வயிறு

உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால்
பணமற்றோர்க்கு பட்டினிதான் துணை
விலை கொடுத்து வாங்கக் காசு
இல்லை என்றால் வயிறு ஏற்குமா அதை?

ஒரு நாளில் அதிக உணவு கிடைத்துவிட்டால் - அதை
ஒரு மாதம் சேர்த்து வைக்குமா வயிறு?
அதுவும் இல்லையே.

பொல்லா வயிற்றின் கொடுமையால் - என்றும்
அல்லல் தான் மக்களுக்கு?
அதிலும் நம் தாயகத்தினருக்கோ?
சொல்லவா வேண்டும்!

நிலத்தில் விளைகின்ற இலைக்கீரையையும்
முருங்கை, முசுட்டைச் செடியையும்
கொய்திடும் போதிலங்கே - அவ்வளவிலே
எரிசாம்பர் மணமும் வீசுமளவுக்கு
இயற்கை அன்னையும் நொந்து போனாளே!

நோய்க்கிருமிகளும் தமது ஆட்சியை
நிலை நாட்டும் காலம் இன்று தாயகத்திலே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய்மனமே!

சிந்தனை செய்மனமே சிந்தனை செய்!
சிந்தனைகள் செய்திட்டால் எமக்குவரும்
நிந்தனைகள் யாவும் பறந்தோடுமே!

மனமே நீ சிந்திப்பதனாற் தான்
மனிதனாக வாழ்கிறோம் இப்பூமியிலே!

சிந்தனையில் வருவது மனத் தெளிவு
சிந்திப்போம் எமதினத்து நிலைதனை!

அன்றாட உணவின்றிப் பட்டினி
அல்லோல கல்லோலம் தாய்நாட்டினிலே
காலையில் உண்ண துண்டுப் பாணில்லை
காலில் மிதிபட்டு குப்பையிலே பாணிங்கே!

உண்ணாமல் காயும் பாணிங்கே
பசி பசி என்றிடும் பிள்ளை அங்கே
பசியில்லை என அழும்பிள்ளை இங்கே!

உணவின்றி அங்கே பரிதவிப்பு
"டயற்" செய்திட இங்கே தவிதவிப்பு!
உணவிருந்தும் உண்ணமுடியாத பலரிங்கே
உணவின்மையால் நடக்கமுடியாத நிலை அங்கே!

வீணாகக் கொட்டுகின்ற பல பதார்த்தங்கள்
மண்ணோடு மண்ணாடும் நிலை இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃறிணைப் பிராணிகளுக்கும் பயனின்றி
அநியாயமாக இங்கே மண்ணாடுகின்றதே!

உண்டுவிட்டு எஞ்சும் எச்சில் உணவுகள்
உயிரினம் எதற்கும் பயனில்லை இங்கே
எச்சில் உணவுக்காக ஏங்கும் உயிரினம்
எம் தாயகத்தில் தவமிருக்கும் பலமாதிரி!

எச்சிலைத் தேடும் மானிடப் பிஞ்சுகளும்
ஏங்கித் தவிக்கின்றன சில நாடுகளிலே
சிந்தித்திடுங்கள் இந்த வேறுபாட்டை
இதைச் சிந்திக்காமல் கிடைத்தது வாய்ப்பு
என இங்கே வாழ்வது முறையோ சொல்வீர்!

உடலுழைப்பால் அங்கே தேகம் அலுப்பு
உடற்பயிற்சிக்கு இங்கே பலர் விருப்பு!

சும்மா இருந்துண்ணும் சோம்பல் உடம்பில்
சுகமாகத் துணைவரும் நோயால் அவதி இல்லை.

"சுகர்" வருத்தம் என்றும் "டியேற்" என்றும்
சொற்கள் எம்மினத்தவர் வாயில் இங்கு!

ஒரு பக்கம் உயர்ந்த மலை என்றால்
மறுபக்கம் தாழ்ந்த பள்ளத்தாக்கு!

ஒருவீட்டில் கலகலப்புச் சிரிப்பு
மறுவீட்டில் மரணத்தின் ஓலம்!

இவை எல்லாம் இவ்வுலகினிலே
இறைவன் எழுதிய வாழ்வுத்தராசு.
இதைப்புரியாமல் வாழ்வு நிலைஎனவும்
இன்பம் நிரந்தரச் சொத்து எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி மனம்போன ஃபோக்கில் வாழ்வது
சிந்தனையுள்ள மனிதனுக்குத் தகுமோ?

வாழ்வோ குறுகியது வசந்தமோ நிலையற்றது
நீர்க்குமிழி வாழ்க்கை மானிடர் வாழ்க்கை - என
நினைத்திட்டால் நிம்மதி வாழ்விலே!

அழியாத செல்வம் கல்வியைப் பெறவே
அன்னை பூமியில் இராப்பகல் படிப்பு
கல்வியின் சிறப்புக்கருதிக் கற்றிட - அங்கே
காலையில் பாடசாலை நோக்கிப் படையெடுப்பு!
கல்வி உபகரணம் இன்மையால் பலருக்கு
கற்பதிலே பற்பல இடையூறுகள்!

காணி நகைவிற்றும் கடன் பெற்றும்
கல்விச் செல்வத்தை வாங்குவர் அங்கே
பணம் பொருள் வசதி இருந்தும் கற்றிடப்
பஞ்சி இங்கு வாழ் சிலருக்கு
வசதியாக எல்லாம் வளமாக இருந்து
கணனியுடன் விளையாடிக் கற்கும்
அதிர்ஷ்டம் இங்குவாழ் மாணவருக்கு!
அதனாலே சிலர் கல்வியைப் புறக்கணிப்பு.

கல்வியால் கணிப்பு சமூகத்தில் என்பதங்கே.
இதைச் சிந்தனை செய்திடுவோம் சோதரர்களே!
வசதியிருக்கும் போது அதைப் பயன்படுத்திடும்
வழியினைச் சிந்தித்துச் செயற்படுவோம்.
சிந்திப்போம் என்றும் சிந்திக்க வேண்டும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகத்திலிருந்து ஒரு குரல்!

நல்ல மகிழ்ச்சியை அனுபவித்தறியோம் - ஒரு
நாளும் வயறுமுட்ட உண்டறியோம்
அல்லல் சூழ்ந்திட வாழ்கின்றோம் - நிம்மதி
அற்றே துயிலை வரிக்கின்றோம்!

தின்னச் சோற்றுக்கு வகை அறியோம் - திடீரெனத்
தோன்றிடும் நோய்க்கு மருந்தறியோம்
சின்னச் சிறார்கள் எல்லாம் இங்கே - ஒரு
சீரற்ற வாழ்க்கை வாழ்கிறாரம்மா!

பகலிலும் எங்களுக்கு ஒளி இல்லை - பகலவனும்
பயந்து பதுங்கி வந்து மறைகின்றான்
சகதியாய்ச் செங்குருதி ஓடுகையில் - பரிதி
சாய்வதும் தோன்றுவதும் தெரியாதம்மா!

பச்சை மரங்களைப் பார்த்தறியோம் - ஒரு
பாவிகளாய் இங்கு வாழ்கின்றோமே!
மிச்சம் மீதி என்று எமக்கில்லை - இதில்
மீளும் வாய்ப்போ எமக்கு இல்லையம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெட்டைப் பனை மரங்கள் எல்லாம் - கருகி
நிலைகுலைந்து நிற்கும் தோற்றம் பார்!
செட்டை இருந்தும் பறக்கமுடியாப் பறவைகள் போல்
சிந்தை கலங்கி நிற்கும் நம்மினம் பார்!

தட்டுத் தடுமாறி வாழும் எம் நிலை அறியீர்! - இது
தாளாமல் கழியும் எம் அன்றாட வாழ்வு பார்!
திட்டங்கள் தேட்டங்கள் எதிலும் பற்றில்லை - எம்
ஜீவனோ எங்கள் கைகளிலே பாரீர்!

வெளிநாட்டில் வாழ்வோரே இது கேளீர்! - எம்
வேதனைகளை ஒரு கணம் சிந்திப்பீர்!
களிப்போடு வாழ்க்கையிலே ஒரு கணம் - எம்
குரலுக்குச் செவி சாய்த்து உதவிடுங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளின் நிழல்கள்

## முகவுரை

'குறளின் நிழல்கள்' என்ற இந்நூலின் மூலம் தற்கால வள்ளுவரைக் காணக்கூடியதாக உள்ளது. வள்ளுவர் வழியில் வாழ்க்கைக்குத் தேவையான பல கருத்துக்களைச் சுருக்கமாகவும் அழகாகவும் ஆழமாகவும் சொல்கின்ற அதேவேளையில் தனக்கேயுரிய தனிப்பாணியில் திருமதி. விக்னா பாக்கியநாதன் அவர்கள் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார்.

உலகத்தில் இருக்கின்ற அனைத்துப் பொருள் பற்றியும் அனைத்துச் செய்திகளையும் வள்ளுவர் வாய்மொழியிலே கூறிவிட்ட பின், அதற்கு மேலே சொல்வதற்கு என்ன இருக்கிறது? எனப் பல உரையாசிரியர்கள் கேட்டிருக்கிறார்கள். 1330 அருங்குறளும் பாயிரத்தோடும் பகர்ந்ததன் பின் போயொருத்தர் வாய் கேட்க நூல் உளதோ? என்பது ஒரு பாடல். ஆனால் இந்த வள்ளுவரே இன்றைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருந்தால் இன்னும் சரியாகச்சொன்னால் அவர் தமிழகத்தை விட்டுப் புலம்பெயர்ந்து ஐரோப்பாவுக்கும், உலகின் பிற நாடுகளுக்கும் சென்று வந்திருந்தால் வாழ்க்கையை அவர் காண்கின்ற காட்சி, நோக்குகின்ற நோக்கு எப்படி இருக்கும் என்று சற்றுக் கற்பனை செய்து பார்க்கிறேன். இவர் இன்றைக்கு இக்குறளை எழுதியிருந்தால் ஒருவேளை திருமதி. விக்னா பாக்கியநாதனின் பாணியிலே எழுதியிருப்பாரோ என எண்ணத்தோன்றுகிறது.

இந்தப் புதிய 'குறளின் நிழல்கள்' திருக்குறளுக்குரிய அத்தனை அழுத்தமான வெண்பா இலக்கணம் தவறாத கட்டுக்கோப்போடு இல்லாவிட்டாலும் வாழ்க்கையில் காணுகின்ற காட்சியும் நோக்கும் வள்ளுவர் பாதையை அண்மித்துள்ளன. அதே நேரத்தில் நமது இலங்கை இந்தியப் பண்பாட்டையும் ஜேர்மன் பண்பாட்டையும் ஒரே நேரத்தில் உராய்ந்து பார்த்து அவற்றின் வன்மை மென்மைகள் எல்லாவற்றையும் வெளிக்கொணரும் வகையில் இவ்விலக்கியம் அமைந்துள்ளது.

நல்ல கணவனுக்கு ஒரு புதிய இலக்கணத்தை இங்கே வைக்கிறார். ஜேர்மனிய கணவனைப்போல வீட்டுப்பணிகளை ஒழுங்காகச் செய்வது; நல்ல கணவனுக்கு அடையாளம் என்று சொல்லிப் புதிய நோக்கை இங்கே காண்பிக்கிறார். வாழ்க்கைத் துணைநலம் என்று வள்ளுவர் கூறியதற்குச் சிலர் இன்றைக்கும் மறுப்புச் சொல்கின்றவர்கள், சொல்லப் பார்க்கிறவர்கள் இன்னும் இருக்கிறார்கள். ஏன் பெண்மையைத் துணையாகக் கொள்ளவேண்டும்? முதலாகக் கொள்ளக்கூடாது? என்ற கேள்வி வந்திருக்கிறது. இந்தக்கேள்வி மேலைநாட்டு வாழ்க்கையிலே இன்னும் அழுத்தமாகவும் அதிகமாகவும் கேட்கப்படுகிறது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் வீட்டுக்குரியவள்; இல்லத்துக்குரியவள்; இல்லாள் என்ற சொல்லைக்கூட நாம் திரும்பவும் சிந்தித்துப் பார்க்க வைக்கும் வகையில் சில குறள்கள் அமைந்துள்ளன.

வள்ளுவர், வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டும் என்று வரையறுத்துச் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்நூலை ஆக்கியவர் வாழ்க்கை இப்படி அமையவேண்டும் என்று சொல்லும் அதே வேளையில் வாழ்க்கை இப்படி அமைந்திருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறுகின்றார். இப்படிப் பல நேரங்களில் இது அறிவுரை நூலாக இருப்பதோடு மட்டுமல்லாமல் வாழ்க்கையை நம் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகின்ற ஒரு காட்சி நூலாகவும் இது அமைந்துள்ளது. இந்த முயற்சி தமிழில் இன்றைய நிலையில் ஒரு புதிய முயற்சி. குறளைத் தழுவி ஏற்கனவே பல சிறு இலக்கியங்கள் வந்திருந்தாலும் பிறநாட்டு வாழ்க்கை அடிப்படையில் உலகளாகவிய ரீதியில் இலங்கை - இந்தியப் பிற பண்பாடுகளையும் இணைத்து, இரண்டு நாகரிகங்களையும் உராய்ந்து பார்த்து, ஒப்பிட்டு உயர்வு தாழ்வுகளை எடுத்துக்கூறுகின்ற வகையிலும் ஆங்காங்கே எம் எண்ணங்களையும் உயர்வுகளையும் மட்டுமல்லாமல் வன்மை மென்மைகளையும், வாழ்வியல் நிலைகளையும் தம்முடைய இரு வரிக்குள்ளே இதமாக அடக்கிக் காட்டுகின்ற தன்மை தமிழுக்குப் புதியது; பொருத்தமானது; தேவையானது. இவருடைய பணி மேலும் வளரவேண்டும்.

பேராசிரியர் **சக்திப்புயல்**
இயக்குநர்
European Centre For Indian Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுரை

"குறளின் நிழல்கள்" - என்னும் இச்சிறு நூல் பொய்யாமொழிப் புலவரின் அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் - என்ற திருக்குறளுக்கு முன்னே அணுவளவேனும் எதிர்நிற்க முடியாது. ஆனால் வள்ளுவர் வகுத்தமைந்த ஈரடிக்குறளின் மங்கிய சிறு சாயல் (நிழல்) பதியும் வகையிலே இந்தக் குறளின் மாதிரிகள் அமைந்துள்ளன. நமது வாழ்க்கையில் அன்றாடம் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற - நடைபெறும் விடயங்களையும், தற்கால வாழ்வுக் கோலங்களையும் இக்குறள்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியாலும் நாகரீக முன்னேற்றத்தாலும் உலகம் கடுகதி வேகத்தில் விண்ணை நோக்கிப்போக மக்கட் பண்புகள் மண்ணை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. இதை ஒட்டிய கருத்துக்கள் இந்நூலிலே ஆங்காங்கே தலைகாட்டுகின்றன. வள்ளுவரின் 1330 குறட்பாக்கள் போலல்லாமல் 0ஐக் குறைத்து 133 மாதிரிக் குறள்களே இந்நூலில் அடங்கியுள்ளன.

குறளின் நிழல்களிலே இளைப்பாறும் வகையிலே ஜேர்-ம(ணி)னிக்குறள்கள் எனும் பெயரினைத் தாங்கி மேலும் சில குறள்கள் இடம் பெற்றுள்ளன. ஜேர்மனிக் குறள்களிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலானவை 1986ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த கலைவிளக்குச் சஞ்சிகையிலே தொடர்ந்து வெளிவந்தவை. அவற்றுடன் மேலும் சில புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள இக்குறள்களில் ஜேர்மனியில் வாழும் எம்மவரின் வாழ்வு முறைமைகள், சிக்கல்கள், மொழிப்பிரச்சனைகள், அந்நியச் சூழலில் அவதியுறும் நிலைமைகள், இலங்கை இந்தியப் பண்பாடுகள் மேலைத்தேயப் பண்பாடுகளோடு மோதும் தன்மைகள் வெளிக்காட்டப்படுகின்றன.

அந்நியநாட்டில் நாம் வாழும்போது பலர் இங்குள்ள நல்ல சில பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் வேளையில், சீதனம், ஆடம்பரக் கொண்டாட்டங்கள், மூடக்கொள்கைகள், பெண்ணொடுக்குமுறை என்பன சிலரிடம் மேல்நாட்டுப் பாணியில் புதுமெருகு பெற்று வளர்ந்துள்ளமை வேதனைக்குரியது. இவை நீங்கவேண்டும் என்ற ஆதங்கத்தினாலே இக்கருத்துக்களும் சில குறளடிகளின் கருப்பொருளாயுள்ளன. மேலைநாட்டில் வாழ்வதாற்தான் நாம் எமது பண்பாடு-மரபுகளின் சிறப்பை அனுபவரீதியாக இனங்காணக் கூடியதாக உள்ளது. சொந்த நாட்டில் வாழ்ந்திருந்தால் எமது பண்பாட்டின் தன்மையை மதிப்பிடும் சாத்தியக்கூறுகள் அவ்வளவாக ஏற்பட்டிருக்க முடியாது. ஒன்றுடன் ஒன்றை ஒப்பிடும் போதுதான் ஒவ்வொன்றின் ஏற்ற இறக்கம் புரியும். எமக்குக்கிடைத்த இந்த வாய்ப்பினை அடிப்படையாகக்கொண்டே இந்நூல் உருப்பெற்றுள்ளது. இனி இதன் குறை நிறைகளை நீங்களே தீர்மானியுங்கள்.

ஐரோப்பிய உயர்கல்வி நிறுவனம் - பிரான்ஸ் இயக்குநர், பன்மொழிப்புலவர், பேராசிரியர் சக்திப்புயல் அவர்களின் முகவுரையைப் பதக்கமெனத் தாங்கி, குறள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் முத்துக்கள் கோர்க்கப்பட்ட ஒரு மாலையாக இந்த குறளின் நிழல்கள் அமைகின்றது. தமது சிரமம் பாராது மனமகிழ்ந்து எம்மை ஊக்குவித்து மேலும் வளம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உயர்வு நவிற்சி மேலிடக் கருத்துக்கள் நல்கி எம் ஊக்கத்துக்கு உரமூட்டிய பேராசிரியர் சக்திப்புயல் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந்நூலினைப் பதிப்பித்த மணிமேகலைப் பிரசுரத்திற்கும், ஆதரவளித்து இந்நூலை ஏற்றுக்கொள்ளும் தமிழ் நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள்.

திருமதி. **விக்னா பாக்கியநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளின் நிழல்கள்

1. ஆதிமூலத்தை அகத்தினிமலர்த்தி அனுதினமும்
ஆராதித்தால் அகல்பவை அவலங்களே.

2. ஆண்டவனிருக்கும் ஆலயமடைந்து ஆணவம்
அகற்றி யனைத்தும் நின்னருள் என்க.

3. தேசாந்தரங்களில் விதேசிகளாய் வாழாமல் - நாம்
சுதந்தரித்து வாழச் சுதந்திரதேசம் தேவை.

4. அந்நியநாட்டு அரசபோக வாழ்க்கை - என்றும்
அந்திமழைக்கு ஒதுங்கும் கூடாரமே.

5. புகலிடத்தில் புரளி புறங்கூறல் செய்தால்
புகல் நீ உனக்கெங்கே இடம்?

6. பஞ்சம் பட்டினி பரிதவிப்பில் எம்மினம் உழல்வதை
நெஞ்சினில் நினையாதார் துரோகிகளே.

7. தாயகம் தாய்மொழி தாயை மறந்தவன்
தன்னை மறந்தவனே.

8. கொண்டாட்டமெனச் செலவழிப்பதிற் சிறிதை - உணவுக்குத்
திண்டாடுவோருக்குக் கொடுத்தல் புண்ணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அக்கிரமம் அவலம் அழிவுகள் அகிலத்தில்
உக்கிரம் பெற்றதால் உண்மைகள் செத்தன.

10. தேசத்துக்குத் தேசமும் இனங்களு மெதிர்த்து - இன்று
பாசத்தைப் புதைக்கவும் துணிகிறதுலகம்.

11. ஒழுங்கற்றவனைத் தண்டிக்கத் துணிந்து வராமல்
ஒளித்தோடுபவரே அதிகமின்று.

12. அடுத்துக் கெடுப்பவர் உறவினை நம்பி அவலப்படாதே
ஓடும் புளியம்பழமும் போல வாழ்.

13. உண்மை உன்வீட்டுப்படி தாண்டிவிட முன்பே
ஊரைத் தாண்டும் பொய்மை.

14. பொய் பொலபொலவெனப் பொரிந்து பரவி
பொசுங்கிவிடும் விரைவினிலே.

15. வதந்தி உன்னை வதைத்துப் பின் வதங்கிவிடும்
பதுங்காதே அதற்குப் பயந்து.

16. தீமைகள் கிளைபரப்பி வளரும் வேளையில்
நன்மைகள் எதிர்நிற்க மாட்டா.

17. பயம் வந்தால் பதட்டம் அவயத்தில் - அது
பதுமையாக்கிவிடும் ஒருவனை.

18. நன்மை செய்தால் நன்றிகூறுவோர் நற்குணத்தோர்
அன்னவர் உறவே உயர்ந்தது.

19. விரயமான செயல்கள் விரக்தியில் முடியும்
திருத்தம் செயின் வருத்தமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. திருப்தி ஒருவனுக்கு வாழ்க்கையிற் தித்திப்பு
திரவியம் இதைவிட வேறில்லை.

21. தன்னலமற்ற தகுதியும் தயாள சிந்தனையும் - தாம்
சொன்னசொல் மாறாமையுமே தலைமை.

22. குற்றம் செய்தவன் குறைகேட்டுக் குனிவடைவான்
பெற்றோர்கூட ஒதுக்குவர் அவனை.

23. புத்திதரும் புலமையால் ஒருவருக்குப் புகழ்சேரும்
சத்தியமிது நீ மறவாதே!

24. அவாவை அணைத்தல் அமைதிக்கு வழி - இது
அவரவர் அறிவைப் பொருத்தது.

25. ஆசையின் விசையால் ஆனந்தம் பெற்றிட மனம்
ஆக்கிரமிக்க நினைக்கும் விளைவு நோக்கா.

26. புதுமை பிறப்பிக்கும் புரட்சியால் மட்டும்
புதுச்சமுதாயம் தோன்றாதுண்மை.

27. மறதி மறைக்கும் மறுப்புக் கூறும்
அறவே அழித்திடு அதனை.

28. குதர்க்கம் குறைகள் குற்றப் பேச்சுக்கள்
எதற்கும் பயனில.

29. உணவுபின் உறக்கம் உபாதை தருமென்றும் - அதைத்
தினமும் நினைவில் நிறுத்து.

30. திருடியவன் திருந்திடத் திடங்கொண்டானாகில்
திருமகள் உறைவாள் அவனிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அடையாத பொருள் அரியது, ஆனாலதனையே
அடைய அவதியுறல் அறிவீனம்.

32. நிதானத்தை நிரந்தரமாய் நெஞ்சில் நிறுத்தினால்
நியாயமான நினைப்பு உருவாகும்.

33. நேசம் நேர்மை நிறைந்த நினைவுகளால்
நேர்த்தியான வாழ்வு கிட்டும்.

34. உள்ளத்திலே உயர்ந்த உணர்வுகள் உறுதியாகினால்
பள்ளமில்லை வாழ்க்கைப் பாதையில்.

35. உண்மையில் உயர்ந்த உத்தமர்கள் சிலராலே
இன்னும் இயங்குகிறது உலகம்.

36. அறியாமை பொறாமை பணப்பித்து ஒருவனுக்கிருந்தால்
பறிபோகும் உண்மையின் கண்கள்.

37. இருக்கும் பணத்தால் செருக்குக் கொள்வோரை
வருத்தமும் தேடிப்போகும்.

38. பணம் பதவி படாடோபம் யாவும் - நீ
பிணமானால் பறந்துவிடும்.

39. நியாயம் நிதானத்தை நீ நிரந்தரமாக்கின்
நிம்மதி நிலைக்கும் உன்னிடம்.

40. உணவு உடை உறையுளை உனதுழைப்பால்
உனக்காக்கின் வீழ்ச்சியில்லை.

41. கவலை கலக்கம் கண்ணீர் நிறைந்தால்
அவலந்தான் வாழ்க்கையிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. கலையும் கவலைதீர்த்துக் களிப்பூட்டி
அலையுமனத்தில் அமைதி தரும்.

43. மனிதனின் மனமொரு மந்தி கேளாய்
புனிதமாக்கிட ஆசையகற்று.

44. கண்காணுங் கவின்களாற் களிப்புற்றுக்
கண் கெட்டு வாழாதே!

45. நேரத்துக்கு மதிப்புக் கொடு எப்போதும் - அது
நகர்ந்துவிட்டால் யாவும் பிசகே.

46. கற்றவன் முன்னே உன் திறமையைக் காட்டு
மற்றவர் முன்னே இணங்கிப்பேசு.

47. அறிவுந்தைரியமும் ஒருவனின் உண்மையான துணை
அறிந்துகொள் அதற்கீடில்லை.

48. அறவே அறிவற்றவர்களுடன் அணைந்து வாழலாம்
சொற்ப அறிவாளரைச் சமாளித்தல் கடினம்.

49. ஆழ்ந்த அறிவும் புலமையுமுள்ள ஆன்றோராயினும்
ஊழ்வினையால் உரை பொய்க்கும்.

50. கற்றவன் அறிவும் கல்வியும் புகழும் - பணம்
பெற்றவன் முன்னே செல்லாக் காசோ?

51. கற்க கல்வியைக் கணனி விளையாடினாலும் - அது
நின்று நிலைக்கும் என்றும்.

52. அன்னைமொழி மறந்து என்னமொழி கற்றாலும்
உன் கல்வியில் உயர்வில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. நற்பண்பு நன்னடத்தை அற்றோர் கல்வி
நாறிய பிணத்துக்குப் பூசிய வாசமாகும்.

54. மற்றவனைத் திருத்த முயற்சிப்பதைவிட உன்னைப்
பற்றியுணர்ந்து திருத்து.

55. உதவாக்கரையாக இருந்து உண்மை பேசுபவனைவிட
உத்தமனாயிருந்து பொய்யுரைப்போன் கீழோன்.

56. படித்த பண்பினால் பணிவு பிறக்கும் - அவர்
பிடித்த முயலுக்கு மூன்று காலெனார்.

57. அன்புக்கடிமையானோர் அர்ப்பணிப்பர் தம்மையே
என்றும் நிலை தளரார்.

58. கடன் கொடுத்துக் காரசாரப்பட்டுப் பகைப்பதைவிட
அடியோடில்லை எனல் மேல்.

59. உதவி வேண்டி வந்ததைப் பெற்றபின் - ஒரு
விதமாக வதனந் திருப்பிச் செல்வர்.

60. நம்மிடந் தவறில்லாதபோது அஞ்சுவதும் ஒதுங்குவதும்
சும்மா தூங்கும் கோழைக்கு நிகர்.

61. வாழ்வதற்குத்தான் பணம் வேண்டுமேயன்றி
பணத்துக்காக வாழ்க்கை அல்ல.

62. அழியாத புகழைத்தேடியவர் இறந்து காலங்கடந்தாலும்
அழியாப் புகழுடன் வாழ்வரவனியில்.

63. துன்பம் தொடர்ந்து துரத்தி வந்தால் ஒருவருக்குத்
தோன்றிடும் நாத்திகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. சந்தோஷமாக வாழ முயற்சிசெய்! அதற்காகப் பிறர் சந்தோஷத்தை உனக்காக்கி விடாதே!

65. உதவி செய்ய நினைப்பது நன்று - அஃதும் உதவிக்கான பலனைப் பாராதே!

66. தன்னிலைமை புரியாது பிறன்பழி கூறினால் அவன்பழி பிறரால் தூற்றப்படும்.

67. ஆசையுற்ற ஒன்றை நீக்கின் அரும்பும் வேறோராசை பசையில்லை அதற்கு ஒன்றிலே ஒட்டிநிற்க.

68. கெட்டவர் வாழ்க்கையைப் பூமித்தாய் அனுமதித்தால் தெட்டத் தெரியும் கலியுகமென்று.

69. தைரியமற்றோர் வீரப்பேச்சு எதற்கும் பயனற்றுப் புழுத்துப்போன சரக்குப் பொருளே.

70. அநீதியும் அவமதிப்பும் அவரவர் நலமுமே - இன்று ஆதிக்கம் அடைந்து அழிகிறதுலகம்.

71. விஞ்ஞானம் விண்ணைநோக்கி வளர வளர - இன்று மெய்ஞ்ஞானம் போகிறது மண்ணைநோக்கி.

72. நியாயங்கள் கேட்க நீதிமன்றங்கள் தவறுவதால் அநியாயங்கள் பிறக்கின்றன அடுத்தடுத்து.

73. காட்டிக்கொடுப்பவன் வாழ்க்கை குதூகலமாகிப் பின் குட்டிச் சுவராகும் விரைவிலே.

74. வேற்றுமையின் வாசலுக்குப் பூட்டுப்போட்டால் - எம்முள் ஒற்றுமையோடு ஒன்றிணைப்பும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. செயற்கரியவற்றைச் செய்யார் சிறியார் - அவர்
செய்யவிடார் மற்றவர்களையும்.

76. ஒருவரில் பிழைபிடிப்பது வெகு சுலபம், ஆனால் - தான்
ஒருபிழையும் விடாமலிருப்பது மிகக்கடினம்.

77. இன்றையகால இராட்ஷதர் அலைவது மானிடரூபத்திலே -
இனங்காட்டும் அவரின் செய்கைகள்.

78. எதைச் செய்யாவிடினும் நாவைக் காக்க - நீ
அதைக் காக்காவிட்டால் வீண்சோலி.

79. கற்றபடி நடக்கிறோமோ என்ற எண்ணமில்லை - இங்கு
கற்றவரில் குற்றங்காண்பது சிலரின் குணம்.

80. அறிவில் ஐந்தும் மூன்றும் தன்னிடமிருந்தால் - தன்னிலும்
அறிஞன் வேறில்லையெனும் கலியுகமிது.

81. நம்மினத்து நல்லார் ஒருவரின் சேவை - இங்கு
அம்மாடி! பொல்லப்பாகிவிடும்.

82. இரக்கம் இரட்சிப்பை இயல்பாகக் கொண்டவரிதயத்தில்
சுரப்பது அன்பூற்று.

83. அடிக்க அடிக்க அம்மியும் நகரும் - எதையும்
படிக்கப் படிக்க இலகுவிற் புரியும்.

84. மது அருந்திடும் போதினிற் தானின்பம் - தவிர்த்தால்
அது வாழ்நாள் வரையும் இன்பம்.

85. பிடிப்பு பித்தாக மாறினால் பைத்தியக்காரனே - அங்கு
வைத்தியன் வந்தாலும் வேலையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. பேராசை பேராதிக்கத்தால் வருவது பேரழிவு - இதை தேராதார்கையில் சிக்கியதேசம் அழிவுறும்.

87. குதர்க்கம் குரோதம் குழப்பம் குடிகளில் வந்தால் நிகராகாது எச்சமாதானமும்.

88. பாடுபட்டுப் பலன்பல கிட்டாவிடினும் தளராது - நீ விடாதே உன் முயற்சியை.

89. இயலாமையும் இல்லாமையும் தூண்டும் இரவலுக்கு - நீக்கிட முயலாமலிருப்பது மடமை.

90. அழகும் அளவிலாப் பணமும் நிலைகுலையும் களங்கமற்ற குணம் நிலைக்கும்.

91. பரம்பரை பழைமையைப் பேணுதலைப் பத்தாம்பசலியென வரம்பிடுதல் பேதமை.

92. சிறப்புற்றோர் சிதைவடைந்தால் சிரிப்புக் குள்ளாவர் இறக்கும்வரை இதை மறக்காதே.

93. குடும்பநிலை உணராது குஷியாக வாழ்பவன் - உலகில் கடையோருள் எல்லாம் தலை.

94. குடிக்கு அலைகின்றனர் சிலர் உலகினிலே - பலர் குடிக்கக் கஞ்சிக்கு அலைவது பரிதாபம்.

95. இளமை இனிக்கும் இரசனை சுமந்தோடும் வளமான வாழ்க்கைக் கப்பல்.

96. கன்னியர் கவர்ச்சி கற்பனை பலகோடி உன்னை நீ இழக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. இன்பம் இச்சை இளமையிலே உச்சம்
நின் நிதானம் இழக்காதே.

98. காமம் கானல் காய்ச்சல் எல்லாம்
சேமம் தராது என்பதுறுதி.

99. மதுவும் மங்கையும் மயக்கம் தருமென்று
அதுவே கதியென அலைவரற்பர்.

100. துக்கத்திற் பங்கேற்கத் துணை ஒன்றிருந்தால்
துச்சமாகிவிடும் சில நாளிலது.

101. இல்லத்தில் இல்லானும் இல்லாளும் ஒருயிராயிருந்தால்
வெல்லங்கூடத் தோற்கும் இனிமையில்.

102. தாய்க்குப் பின்தான் தாரமானாலும் தாரமும் - சில நேரத்தில்
தாயாகலாம் தன்சேவையால்.

103. அன்னையின் அரவணைப்பிலும் அன்பிலும் அகப்பட்டால்
என்ன சுகமும் அதற்கீடாகாதே.

104. குடும்பத்தில் குழந்தைகளே குதூகலம் - அவை
அடுத்தடுத்து வந்தால் வில்லங்கம்.

105. குழந்தைகளின் குறும்புகளில் குதூகலித்து - அதை
வளர்க்கும் முறையை வழுவவிடாதே!

106. தாரமும் பாரமும் சுமந்தாற் புரியும் - அதற்குமுன்
வாராதிந்த அனுபவம்.

107. பெற்றோருக்கு அவப்பெயரைத் தேடும்பிள்ளைகளைப்
பெறாமலிருப்பது கோடி நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. தான்பெற்ற பிள்ளையின் தரங்கெட்ட தன்மையால்
தாயுள்ளமோ குமுறும் எரிமலை.

109. பெற்றோருக்கு உதவாத பேரும்புகழும் ஒருவருக்கு
வெற்றுத்தாளே வாழ்க்கைப் புத்தகத்தில்.

110. மணம் மறுத்த மங்கை மனம் பொசுங்கி
மரணத்தில்தான் இன்னும் முடிவதா?

111. கற்பு களங்கமானால் கல்யாணமில்லை எனும்
சொற்கள் பெண்ணுக்கு மட்டுமா?

112. அழகூட்ட அணிகலனை அளவாக அணிவதே
எழிலூட்டும் மங்கைக்கு அழகு.

113. கற்பு என்பது கர்ப்பப்பை உள்ள இடத்திலா? அது
மற்றவர்க்கில்லையா பகர்!

114. ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா இன்னும்?
கோணற் புத்திக் கொள்கையிது.

115. பணம் பதவி புகழிருந்தும் அதையனுபவிக்க
இளமை இல்லாவிடில் முழுமையில்லை.

116. தயவின்மை தனிமை தள்ளாமை எல்லாம்
வியப்பில்லை எல்லோருக்கும் வரும்.

117. முதுமை மூப்பு முடிவு எல்லாவுயிர்க்கும்
பொதுமையான இயல்பன்றோ!

118. படித்தவராயினும் முதுமையை அடைந்தால்
பாலன் சொற் கேட்கத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. உடலின் உபாதைகள் உணர்வுகளைத் தாக்குவதால்-இது
தடங்கல் மூளைக்குத் தள்ளாமையின் ஆரம்பம்.

120. முதுமையிற் தெரியும் இளமையின் அருமை
பிரிவினிற் புரியும் உறவினருமை.

121. எழில் இளமை யௌவனம் எல்லாம் ஒருமுறைதான் - அது
கழிந்துவிட்டால் மீண்டும் வரா.

122. பிறந்து வயதேற ஏற நெருங்கிச் செல்கிறோம் - எம்
இறப்பின் தரிப்பிடத்தை.

123. வாழ்க்கையில் யாவருக்கும் உறுதியாகத் தெரிந்ததொன்று
யாக்கை அழியும் மரணமே.

124. இறப்பு எல்லோருக்கும் வருமென்று தெரிந்தும் - அதை
மறந்து மாபெருந்திட்டமிடல் வியப்பு.

125. சந்தோஷ சல்லாப சந்தானங்கள் எல்லாம் - ஒருவர்
வெந்தீயிற் போகும் வரைக்குமே.

126. காதற்ற ஊசியென்ன கண்மணியும் வாராது - உன்
சாதலின் பயணத்திலே.

127. மனைவி மக்கள் மனை மற்றுமுளதெல்லாம்
துணைவரா உன்னுயிர் பிரிகையில்.

128. பிறந்தோம் வளர்ந்தோம் இறந்தோம் என்றிடாமல் - புவி
மறக்காதிருக்க ஏதும் செய்திடல் நன்றே.

129. இறைபுகழ் பாடுதல் அவனருள் வேண்டுதல் - மனக்
குறைதனைக் குறைத்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. இருக்கும்வரை இப்பூமியில் இனசனங் காத்து - நாம்
ஒருவருக் கொருவர் ஒற்றுமையாயிருப்போம்.

131. நீ செய்த தானதருமம் தொண்டுகள் மட்டுமே - முடிவில்
உன்னை உய்விக்கும்.

132. நன்றே செய்வோம் நல்லன பேசுவோம் - என
இன்றே திடங் கொள்க.

133. கண்ணுக்குத் தெரியாத கடவுளை என்றும் - மனக்
கண்ணாற் கண்டு தொழு.

**(முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்-ம(ணி)னிக் குறள்கள்

1. பனியும் குளிரும் இல்லாவிடில் ஜேர்மனி - சிலருக்கு
பூவுலகிற் சொர்க்கத்தின் சுரங்கம்.

2. ஜேர்மனியிற் கற்கவேண்டியதைக் கல்
கற்றபின் அறிந்து நட.

3. தஞ்சமளித்தாற் போல தனக்குவேண்டிய மாதிரியே
தர்க்கித்துப் பெற எமக்கென்ன உரிமை?

4. இன்று உண்டபின் நாளைக்கென்ன? - எனத்
தினமும் நினையா வாழ்விங்கே.

5. அகதிகளாக ஐம்பதுபவுண் போட்டாலும் - ஒருவர்
பெறுகின்ற உதவிப்பணம் ஓரளவே.

6. பனியில் உழைத்த காசின் அருமை தெரியாமல்
'தண்ணி'க்கே செலவிடுவோரை என்னென்பது?

7. சோம்பேறிகளாக வாழவேண்டுமாயின் ஒரேவழி
மேல்நாட்டில் தஞ்சம் கோருவதே.

8. எந்த உயிரினமும் சும்மாயிருந்திட உணவு கிடைப்பதில்லை
இந்த மனிதர் அதை விரும்புவதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சும்மா இருந்தால் சோற்றுக்கு நட்டம் - ஆனால்
இங்கே தேகநலத்துக்கு நட்டம்.

10. நேர்மையும் நீதியும் பேசவேண்டாம் - நாம்
தமிழராக வாழ்ந்தாலே போதும்.

11. ஜேர்மன்காரராக தமிழர் வாழ முயற்சித்தாலும்
தோல் காட்டிக்கொடுக்கும் அவனை.

12. இங்கு 'காட்' இல்லையே என ஏங்குவதேன்? - நெடுநாள்
பூமியிலிருக்க யார் தருவார் 'காட்'?

13. அகதிகளாக இங்கு வாழ்ந்தாலும் முயன்று
பணம் தேடிச் சம்பாதிக்க.

14. படித்த நற்பதவி வகித்த தமிழரின் நிலை
மட்டந் தட்டம் ஜேர்மனியில்.

15. அதிபர் ஆசிரியர் மெக்கானிக்கர் முதலாளிகளே - நீவிர்
கொதிக்காதீர் கோப்பை கழுவும் வேளை.

16. கண்டது கற்கப் பண்டிதனாவான் - ஜேர்மனியில்
காணாதவற்றைக் கண்டால் என்னாவான்?

17. தமிழர்தம் பண்பாட்டைப் பின்பற்றாமைக்கு - உவமை
கானமயிலாடக் கண்ட வான்கோழியே.

18. தம்பிள்ளைக்குக் கல்வி போதிக்கத் தெரியாவிட்டாலும்
நேரத்துக்குத் துயில அனுப்புதல் கடனே.

19. சொந்தப் பிள்ளையைத் திருத்தக் கண்டித்தால்
வந்துவிடும் போலீஸ் வக்காலத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. அவரவர் குடும்பமே ஜேர்மனியில் இரத்தவுறவு
ஏனையோர் மூன்றாம் நபர்.

21. மகன் தந்தைக்காற்றும் உதவி இங்கே
'ரான்ஸ்லேற்ற'ராகப் போதல்.

22. கணவன் மனைவிக்காற்றும் உதவி இங்கே - ஒரு
ஜேர்மனியத் தந்தைபோல வீட்டுப்பணி செயல்.

23. மங்கலமென்பது 'பேத்டே' கொண்டாட்டம் - அதன்
நன்கலமென்பது நால்வகைப்பானமும் உணவும்.

24. பெறுமவற்றுள் யாமறிந்ததொன்று அறிவறிந்த
மக்களைச் சோஷலில் இருக்கும்போது பெறல்.

25. வேலைக்காசும் ஷோசல் காசும் உடைத்தாயின்
ஜேர்மன்வாழ்வின் நோக்கமும் திருப்தியுமது.

26. என்னதொழில் செய்தாலும் உய்வுண்டாம் உய்வில்லை
சின்னத்தனமான தூள் வியாபாரிக்கு.

27. உணவு நித்திரை படம் என்பன ஜேர்மன் வாழ்வானாலும்
அது பிறர் தூற்றாமை நன்று.

28. பணமென்ப பவிசென்ப இவ்விரண்டும் - இங்கே
கண்ணெண்ப எம்மவர்க்கு.

29. மற்றோரை அவமதித்தலும் இழித்துப்பேசலும் - பணம்
பெற்றோரின் ஒரு குணம்.

30. பொதுப்பணிக்குச் சில்லறைதரச் சிலர் விரும்பார் - திரையில்
கவுண்டமணியின் படத்துக்கு முன்னிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. உடம்புக்கு மெருகூட்டப் பலவகை அயிட்டமிங்கே - அதையே அழித்திட சயனைட் தாயகத்தில்.

32. குடியேறிய நாட்டு மொழி தெரியாதோர் பாவம் - உளத் துடிப்பை உணர்த்த முடியார்.

33. ஒழுங்கான நடத்தைக்கு ஒருகாலும் குறைவில்லை வழுவற்க எந்நிலையிலும்.

34. பணிவு அடக்கம் என்பன பயந்தவர்க்கு அல்ல துணிவுடையோரின் உயர் பண்பிவை.

35. தன்னைத்தானே உயர்வாக எண்ணுவோன் என்றும் மற்றவன் திறமையை அங்கீகரியான்.

36. கிடைக்கிறதே என்று கண்டதெல்லாம் உண்டு கிடக்காதே படுக்கையில்.

37. இராப்பொழுது ஒதுக்கிடம் தனியிடம் என்பவற்றில் ஒரு போதும் தரித்து நில்லாதே!

38. அந்நியநாட்டினில் தமிழரொருவர் செய்த தவறு - முழுத் தமிழனித்துக்குமே சாரும்.

39. வெளிநாட்டு வாழ்வு தரும் அனுபவப்படிப்பை - எங்கும் அளியாது எப்பல்கலைக் கழகமும்.

40. உன்பிள்ளை டொச் பேசுகிறானென இறுமாப்படையாதே- ஒரு தமிழகக்கிளியும் ஜேர்மன் வந்தால் டொச்பேசும்.

41. வறுமை என்பதால் ஊரிற் சீதனமுறை என்றால் கருமம் இங்கேயும் வந்தாலதன் நோக்கம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. தோன்றில் ஜேர்மனியில் நாயாய்த் தோன்றுக
அஃதின்றேல் தோன்றாமை நன்று.

43. தகாதவுறவு மூலம் பெற்ற பிள்ளையின் தாயைவிட - இங்கு
தந்தைக்கே கலக்கமும் பணவிரயமும்.

44. ஊரினில் உயிருடனிருக்கும் பெற்றோரைப் போய்ப்பார்க்காத
ஊனற்பிறவிகள் நாமிங்கே.

45. உழைத்து வாழ்பவருக்கே இங்கேயெதிலும் முதலுரிமை
ஏனையோர் பயந்தொடுங்கி வாழ நியதி.

46. பணம் புகழ் இல்லார் வாழ்க்கை இங்கே
மணமற்ற காட்டு மலர்களே.

47. இக்கரைக்கு அக்கரை பச்சையென நினைத்து உலகின்
எக்கரையில் வாழ்ந்தாலும் சொந்தநாடாகா.

48. பணந்தேட செய்தொழில் எதுவாயினும் செய்யும்
குணமிருந்தால் நம்நாட்டில் ஏன் பஞ்சம்?

49. தூய உள்ளமுடையோர் செய்கைகள் எல்லாம்
சாயமற்றுப் போயின இன்று.

50. அம்பலமேறி அடுக்குமொழி பேசிமுழங்குவோர் - சிலர்
தம்மில்லத் தகராற்றை தீர்க்கத் தெரியார்.

51. தள்ளாத பெற்றோரைத் தாங்குவர் பிள்ளைகள் என்றநிலை
இல்லாத பொல்லாத காலமிது.

52. உதவி செய்யநினைத்தால் உடனுக்குடன் உபத்திரவமும்
அவதியும் வருமென்று அறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. உடல் தளர்ந்து மூப்பு உன்னைத் தேடிவந்தாலும்
விடாதே உன்கைப் பொருளை.

54. அந்நியநாட்டு எமது வீடும் தேட்டங்களும் - ஒருநாள்
காகக்கூட்டுக் குயிற்குஞ்சுக்கு ஒப்பாகும்.

55. சுடச்சுடத் தங்கம் ஜொலிப்பது போன்று - துன்பம்
படப்பட மனம் பக்குவப் படும்.

56. புறங்கூறல் பழித்துரைத்தல் இகழ்தல் எல்லாம் - இங்கு
அறமாயிற்றோ? அவையாவும் அத்துப்படி.

57. நிம்மதியாக நீயிங்கே உண்டுறங்கி வாழ்வது - உயிரைத்
துச்சமாக மதிக்கும் தியாகிகளாலே.

58. கள்ளமில்லாச் சிந்தையுடன் வளரும் பிள்ளைகளின் மனம்
கடிதினில் எதையும் கற்பதால் நற்சூழலிற் பழகவிடு.

59. அந்நியமோகம் பழக்கவழக்கத்தை அகத்தினிற் பதிக்காதே
அந்தரத்தில் நிற்கவைக்கும் உன்னை.

60. தஞ்சம்தேடி தாய்நாடு தாண்டி வந்தாலும் - எம்
நெஞ்சத்தில் நிறுத்துவோம் எம்மிறையை.

61. பாலினக் காட்சிகளாலே பாலரும் பெரியோராகும்
கலியுக அறிகுறி இங்கே.

62. இல்வாழ்வுத் துணைகளுள் நல்லிணைப்பு இல்லாவிடில்
எல்லாமிருந்தும் பயனிலவே.

63. மணமாகுமுன் ஒருவனொருத்திக் கோட்பாடேன்? மணத்துக்குப்
பின்பேயது என்பதே ஜேர்மனிய இல்லறநெறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. இல்வாழ்க்கையில் துணையும் முதலும் என்றில்லை
இருவருமே சமம் என்பதிங்கே.

65. விதைத்த நிலத்திற்கேற்ப பயிர் பயனீவது போன்றே
வளர்ந்த சூழலுக்கேற்ப பிள்ளை.

66. தன்னைத்தான் புகழும் ஆயிரம் வார்த்தையை விட
இன்னொருவன் கூறும் ஒரு வார்த்தை மேல்.

67. உதவுவது போல் வருபவரை நம்பாதே - ஏதோ
உன்னிடத்தில் உள்ளதிற் கண்ணவர்க்கு.

68. முகத்தினில் இனிமை காட்டும் நட்பை நம்பாது
நகம்போல் கத்தரித்து விடு.

69. அடுத்தவன் ஒருவனின் ஆக்கம் கெடுப்பவன் தன்னை
அடுத்தாலே உனக்குக் கேடு.

70. அன்னைமொழி நீக்கிப் பிறமொழி புகட்டிடல்
தன்னையே மறப்பதற் கொப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மொழி வாழியவே!

வளர்க! தமிழ்மொழி நம் வண்டமிழ் மொழி
வளர்க வளர்கவே!

வாக்கினில் நின்று நெஞ்சை நிறைத்திடும் மொழி
வனப்பொடு ஓங்குகவே!

ஏழ்கடல் சூழ்ந்த உலகினில் ஒலிக்கும் மொழி
எண்திக்கும் வியந்திடவே!

என்றும் வாழும் எங்கும் வாழும் எம்மொழி
தொன்மைகள் சூழ் மொழியே.

தான்தோன்றிய நாடுகளிலன்றி தன்னினம் வாழும்
அந்நிய மண்ணிலும் குடியேறியதே.

நல்லனபுகட்டி நானிலம் போற்றும் மொழி
நல்லியல்புகள் சேர வாழியவே!

பிறமொழிப் பற்றின்றித் தமிழ்மொழி ஓங்க
போற்றுங்கள் எம்மொழியினையே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியைப் பற்றி...



இந்நூலாசிரியை
**வின்னா பாக்கியநாதன்**

1975-1978 வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமாமணிப் பட்டதாரியாகி பின்னர் வேலணை... சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றியமை.

1981... ஜேர்மனிக்குப் புலம் பெயர்ந்து திரு.சு.பாக்கியநாதன் பீ.ஏ. (புவியியல் சிறப்பு) அவர்களைத் துணைவராக்கியமை.

1984-ல் சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் என்னும் ஒப்பீட்டு ஆய்வுநூலை இருவரும் இணைந்து எழுதி வெளியிட்டமை.

1987-1993 வரை கலைவிளக்கு எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வந்த கணவருக்குத் துணையாசிரியையாகச் செயற்பட்டமை. இன்று இச் சஞ்சிகை கலைவிளக்கு வீடியோப் பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

1987 முதல் இன்றுவரை டோற்மூண்ட். கரிதாஸ் தமிழ்ப்பாடசாலையில் பகுதி நேர வேலையாக ஆசிரியையாகப் பணியாற்றல்.

### 1988 முதல் ஆசிரியை எழுதிய பிற நூல்கள்

| | |
|---|---|
| ஆதங்கம் | (புதுக்கவிதைகள்) |
| அழிவின் சுவடுகள் | (புதுக்கவிதைகள்) |
| கவிமலர்கள் | (மரபுக்கவிதைகள்) |
| பாலர் பாடல் | (பாடல்கள்) |
| உறவுக்குப் போராட்டம் | (சிறுகதைகள்) |
| குறுகிய காலத்தில் தமிழை எவ்வாறு கற்பிக்கலாம்? | (ஆய்வுக்கட்டுரை) |
| மாணவர் கட்டுரைகள் | (பாடநூல்) |
| இலக்கணம் கற்போம் | (இலக்கணப் பாடங்கள்) |
| ஆண்டு-3 செயல்நூல் | (பாடநூல்) |
| குறளின் நிழல்கள் | (நவீன குறள்கள்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803